தமிழிசைப் பாடல்களும் நாட்டியப் பதங்களும்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 225

தமிழிசைப் பாடல்களும் நாட்டியப் பதங்களும்

(வாசுதேவகவி இயற்றியவை)

பதிப்பாசிரியர் :

வேதாந்த விசாரத், வேதாந்த சிரோமணி

தமிழ் வித்வான் **ந. சீனிவாசன்,**

சம்ஸ்க்ருதப் பண்டிதர், (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

[விலை : ரூ. 30 - 00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: தமிழிசைப் பாடல்களும் நாட்டியப்பதங்களும்
பதிப்பாசிரியர்	: ந. சீனிவாசன்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	: 225
மொழி	: தமிழ் (தெலுங்கு எழுத்திலிருந்து)
பதிப்பு	: மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: 2006
தாள்	: TNPL 18.6 கி. கி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 104
படிகள்	: 500
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: இசை, நாட்டியம்.
விலை	: ரூ. 30 - 00

வெளியீட்டாளர் முகவுரை

கி. பி. 1684 - 1711 வரை தஞ்சை அரசராகத் திகழ்ந்த சகஜி என்பார் செங்கோலோச்சிய மன்னராக மட்டுமன்றி சிறந்த இசை வாணராகவும் திகழ்ந்தார். பன்மொழி வித்தகராகத் திகழ்ந்த இவர் பல மொழிகளிலும் பாடல்களை இயற்றி அதற்கு இசையும் வகுத்தவர். சிறந்த வாக்கேயக்காரர்களைத் தன் அரசவைக் கலைஞர்களாக நியமித்து இசைக்கும் நாட்டியத்திற்கும் அருந்தொண்டாற்றினார். அவரது நெருங்கிய நண்பராகவும், சிறந்த இசைவாணராகவும் திகழ்ந்த வாசுதேவகவி என்பவருக்கு மிகுந்த ஆக்கம் அளித்து அவரது படைப்புக்களைத் தொகுத்து வைத்தார். அத்தகைய தொகுப்புகளுள் ஒன்றுதான் **தமிழிசைப் பாடல்களும், நாட்டியப் பதங்களும்** எனும் இந்நூலாகும். இந்நூலில் வாசுதேவ கவியின் படைப்புக்களான 78 பதங்கள் இடம்பெற்றுள்ளன. சரசுவதி மகால் நூலக முன்னாள் சமஸ்கிருதப் பண்டிதர் திரு. ந. சீனிவாசன் இதனைச் செம்மையுறப் பதிப்பித்துள்ளார். அவரது பணி பாராட்டுக்குரியது.

மூன்றாம் பதிப்பாக மலரும் இந்நூல் சிறப்புற வெளிவருவதற்குத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு

மேலாளர் முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன் மற்றும் பதிப்புத்துறை பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
3-1-2006

மா. வீர சண்முக மணி, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

முகவுரை

தஞ்சையை அரசாண்ட சோழர், நாயக்க, மராட்டிய மன்னர்கள் இசை, நாட்டியம், நாடகம் போன்ற கலைகளைச் சிறப்பாக வளர்த்துள்ளனர். சோழ மாமன்னன் முதலாம் ராஜராஜன் எழுப்பிய பெரியகோவில் கருவறையின் மேல்தளத்தில் நாட்டியத்தின் முக்கிய அம்சமான கரணத்தின் முத்திரைகளைப் பாதுகாத்துள்ளான். இதைப் போலவே நாட்டியத்தின் கரணங்களைச் சிதம்பரம் நடராஜப் பெருமானின் ஆலயத்திலும் காணமுடியும். தஞ்சைப் பெரியகோவிலில் நடனமாடுவதற்காக நானூறு தளிச்சேரிப் பெண்களைத் தஞ்சையில் குடியமர்த்தி இக்கலையை வளர்த்துள்ளான் என்பவை வரலாறு கூறும் உண்மைகள். இதனைப் பின்பற்றியே, பிற்காலத்தில் தஞ்சையை அரசாண்ட சோழர், நாயக்கர், மராட்டியர் ஆகியோரும் இக்கலையைப் பேணிக்காத்தனர்.

இவர்களில் கி.பி. 1684 - 1711 வரை தஞ்சையை அரசாண்டவன் இரண்டாம் சகஜி மன்னன்.

இம்மன்னனும் முன்னோர்களைப் போலவே கலையின் காவலனாகவிருந்து பல்கலைகளை வளர்த்தான். இவன் ஒரு பெரும் இயற்புலவனாகவும், இசைப் பாடலாசிரியனாகவும் விளங்கியவன். இம்மன்னன் 22 இசை நாட்டிய நாடகங்களையும், சுமார் 208 பதங்களையும் இயற்றியுள்ளான். இவன் இயற்றிய பதங்களைக் கீழே காணும் வகையாகப் பிரிக்கலாம்.[1]

1. Tanjore as a seat of Music - pp.70

பக்திப் பதங்கள்	-50
பாவப் பதங்கள்	-05
வைராக்கியப் பதங்கள்	-09
சிருங்காரப் பதங்கள்	-103
ஹாஸ்யப் பதங்கள்	-14
நீதிப்பதங்கள்	-24
மங்களப் பதங்கள்	-03
ஆக	208

மன்னன் பெரும் புலவனாகவும், கலைக் காவலனாகவும் விளங்கியதால் புலவர்களின் கூட்டமும், கலைஞர்களின் கூட்டமும் தஞ்சையைப் புகலிடமாக்கிக்கொண்டன. தங்களால் கலையையும், கலையால் தங்களையும் மேம்படுத்திக்கொண்டனர். அங்ஙனம் தஞ்சையைப் புகலிடமாகக் கொண்டு மன்னர் சகஜியின் அவைப்புலவராக வாழ்ந்தவர் ***வாசுதேவகவி*** என்னும் புலவராவார்.

புலவர் வரலாறு

வாசுதேவகவியைப் பற்றிய முழுச் செய்திகளும் அறியப் போதியச் சான்றுகளில்லை. இவர் ஓர் அரசவைப் புலவர் மட்டுமல்லாது பன்மொழிப் புலவராகவும் வாழ்ந்தவர். தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளை நன்கு அறிந்தவர். இவர் இந்த மூன்று மொழிகளிலும் மணிப்பிரவாளப் பதங்களையும் சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் பல தனித்தனிப் பதங்களையும் தனிப்பாடல்கள் பலவற்றையும் பாடியவர். ***தூதபஞ்சகம், நவரத்தினமாலிகா*** என்னும் சம்ஸ்கிருத இலக்கியங்களை சகஜி மன்னன் மீது பாடியவர். ★

* Copied Vol. 813

மேலும் தெலுங்கு மொழியை நன்கு அறிந்தமையால் க்ஷேத்திரீயரின் பதங்களைப் பின்பற்றி தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பல பதங்களை இயற்றியுள்ளார். பதங்களை இயற்றும் கவிஞன் யாப்பிலக்கணப் புலமையும், அலங்கார சாஸ்திரத்தில் ரஸ-பாவமும், இசை நாட்டியத் துறையில் ராக-ரஸ-ஸ்வர-தாளஞானமும், தலைவன் தலைவி (நாயக-நாயகி) விஷயங்களும் நன்கு உணர்ந்திருந்தால்தான் உயர்தரமான பதசாகித்தியங்களை இயற்றமுடியும் என்பது முன்னோர்களின் கருத்து.

ஆதலால், இப்புலவர்பெருமான் மேற்படி அனைத்துத் தகுதிகளையும் பெற்றும், மன்னன் சகஜியின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவன் என்பதும், இவருடைய பலசாகித்தியங்களில் மன்னன் சகஜி மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தான் என்பதையும் கீழே காணும் வரிகளால் அறியலாம்.

"தேனிலும் வாசுதேவன் மதுரம் பெறு
செந்தமிழே இனிக்கு தென்றானை"

(வரச்சொன்ன - பக்-34)

"அருள் வாசுதேவன் மேலே
அன்புவைத் தொருநாள் போலே
வரிசை செய்து" மேன்மேலே
வளர் சாகேந்திர! என்மேலே

(இத்தனை மோடி-பக்-16)

"வாசுதேவன்மீது வீசு
வாசம் வைத்து ரக்ஷிக்கும் போச!"

(கருவம் கண்டே-பக்-51)

வாசுதேவகவி என்னும் இந்த நூலாசிரியர் பல ஊர்களுக்குச்சென்று அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த பல குறுநில மன்னர்களை (ஜாமீன்தார்களைப்) புகழ்ந்து பதங்கள் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள குறுநில மன்னர்களின் பெயர்கள் வருமாறு:

1. நிறையூர் வடிவழகநம்பி
2. வருதை சேனாதிபன்
3. ராசை முத்துவீரர்
4. தளவாய் நரசேந்திரன்

மேலும் பல தலங்களிலுறையும் சிவபெருமான், தேவி, முருகன் போன்ற தெய்வங்களைப் புகழ்ந்து தமிழில் பாடியுள்ளார். இறைவன்மீது பாடல்களையும், நாட்டியப் பதங்களையும் பாடியுள்ளார்.1

சகஜி மன்னனின் காலத்திற்குப்பின் வாசுதேவகவியின் பாடல்களில் ஒன்றுகூட இதுவரை அகப்படவில்லை. இதனால் மன்னன் சகஜிக்குப்பின் இவர் தஞ்சையிலிருந்து வேறு சமஸ்தானங்களுக்குச் சென்றிருக்கலாம் என்றும் அறியமுடிகிறது.

தமிழ்ப் பதங்களையும்-கீர்த்தனங்களையும் இயற்றி புகழ்பெற்ற முத்துத்தாண்டவர் காலத்துக்குப்பின் தமிழில் நாட்டியப்பதங்கள் கிடைத்திருப்பது வாசுதேவகவியின் பதங்களேயாகும். இவை அக்காலத்திய தமிழ்நடை மற்றும் இசைப்பாடல்களில் காணப்படும் முன்னெதுகை, பின்னெதுகை போன்ற பல்வேறு செய்திகளையும் தாங்கி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்காலத்துத் தமிழ்ப்புலவர்கள்

வாசுதேவகவியின் காலத்தில் வாழ்ந்த அரசவைப் புலவர்களில் தமிழ்ப் புலவர்களாக உள்ளவர்கள் முத்துக் கவிராயர், மகாகவி சப்தரிஷி, ராமபாரதி ஆகியோர். இவர்களில் வாசுதேவகவியும், ராமபாரதியுமே சிருங்காரப்

1. வாசுதேவகவி எழுதிய பதங்கள் அனைத்தும் மன்னன் சகஜியையேபாட்டுடைத்தலைவனாகக்கொண்டது என்ற கருத்தை டாக்டர் S. சீதா அவர்கள் தனது நூலில் (Tanjore as a seat of Music p. 148) குறிப்பிட்டுள்ளார். ஆனால் தற்போது தொகுத்து வெளியிட்டுள்ள இந்த நூலில்சகஜியை மட்டுமல்லாது வேறுசில குறுநில மன்னர்கள், தேவதைகள் மீது பாடிய பதங்களும் உள்ளன. என்பதையும் அறியலாம்.

பதங்களைப் பாடியவர்கள். முத்துக்கவிராயர் சில பதங்களையும் பாடியுள்ளார் என்று தெரிகிறது. அவர் பாடியுள்ள பாடலில்:-

"முத்துக்கவி பதம் பாடி
முல்லை மல்லிகை மலர்சூடி"

என்ற வரிகள் அகப்படுகின்றன. இதனால் இவரும் பதம் பாடியுள்ளார் என்று அறியமுடிகிறது. ஆனால், இவர் பாடிய பதங்கள் கிடைக்கவில்லை.

மேலும் இந்த முத்துக்கவிராயரும், மகாகவி சப்தரிஷியும் இம்மன்னன் காலத்தில் இயற்றிய குறவஞ்சி நாட்டிய நாடகங்களே தற்போது கிடைத்துள்ள குறவஞ்சி நாடகங்களில் காலத்தால் முன்தோன்றியவை★ எனின் மிகையில்லை.

நடன நிகழ்ச்சிகளும் அவற்றின் காலமும்

மன்னனுடைய அவையில் தினந்தோறும் நடனம் நாடகம், இசை ஆகிய கலைநிகழ்ச்சிகள் அரசவையிலேயே நடைபெறுவதுண்டு. இதில் பண்டிதர்கள் முதல் பாமரர்கள் வரை அனைவரும் கண்டும், கேட்டும் களிப்பெய்தலாம். ஆனால் மன்னர்கள் இன்பமாகப் பொழுதைக் கழிக்க அரண்மனையின் அந்தப்புரத்து நடன அரங்கில் (இன்று சதிர்மாளிகை என்று அழைக்கப்படும் இடமாக இருக்கலாம்) "சிருங்கார நாட்டியப் பதங்கள்" நடைபெற்றுள்ளன. இது தினந்தோறும் இரவு 10 மணிக்குமேல் 2 மணிக்குள்ளாக நடைபெறுமென்றும், இதில் நடித்த பெண்மணிகள் நடனக்கலையை நன்கு அறிந்தவர்களாயும் தேவருலகத்து அரம்பையரை நிகர்த்தவர்களாயுமிருந்தனர் என்னும் செய்திகள் போசலவம்சாவளி சம்பூ என்னும் சமஸ்கிருதச் சுவடியில் காணப்படுகின்றன.

★ இசைஇயல்-க, பொன்னையாப்பிள்ளை

இசைப்பாடல்களில் அமைப்புமுறை

இசைபற்றி எழுந்த பால பாடங்களைத் தவிர மற்றெல்லாப் பாட்டுக்களும் ஸ்வரம், தாளம், எதுகை, மோனை முதலிய அழகமைந்த சொற்சுவை, பொருட்சுவை ஆகியவற்றுடன் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்கிற இலக்கண உறுப்பமைந்து காணப்படுகின்றன. பல்லவி என்பது ஒரு இசைப்பாட்டின் முதற்பாகம். அனுபல்லவி இரண்டாம் பாகம், சரணம் மூன்றாம் பாகம்.

'பல்லவம்' என்ற சொல்லுக்கு 'தளிர்' என்பது பொருள். ஒருவிதை முளைத்து, இளையாகி, கிளையாகி பூவாகி எங்ஙனம் இன்பமளிக்கின்றதோ அதைப்போல் இசைப்பாட்டு முதலில் பல்லவி என்பதால் கிளைத்தும் அனுபல்லவியினால் வளர்ந்தும், சரணத்தால் ஒன்றுக்கு மேற்பட்ட பற்பல வேறுபாடுகளை அமைத்துக்கொண்ட கிளைகளைப் போல், நமது செவிக்கின்பம் அளிக்கின்றது. பாட்டு, பாடல், பா, செய்யுள், உருப்படி என்பன ஒரே பொருளைத் தருவன. இதனை 'கிருதி' என்று சமஸ்கிருதத்தில் கூறுவர். 'க்ரு' என்ற மூலச்சொல்லுக்கு 'செய்தல்', 'உருவாக்குதல்' என்பது பொருளாகும். இதனால் கிருதி என்ற பொதுச்சொல்லாலேயே அனைத்துப் பாடல்களையும் அழைப்பது வழக்கமாயிற்று. ஆனால், கீர்த்தனைக்கும், பதத்திற்கும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற உறுப்புக்கள் இருந்தபோதிலும் இவ்விரண்டுக்கும் பெருத்த மாறுபாடுகள் உண்டு. அவற்றைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

கீர்த்தனம்

இவ்வகைப் பாடல்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கவேறுபாடுகளுண்டு. இவ்வகைப் பாடல்கள் இறைவனுடைய புகழை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும். பக்திச்சுவையுடன் கூடிய துதிப்

பாடல்களாக அமைக்கப்பட்டிருக்கும். இதனால் இறைவனின் புகழைப் பாடுவதே கீர்த்தனம் என்ற பொருளில் (கீர்த்தயதே இதி கீர்த்தன) காரணப்பெயராக அமைந்தது.

பதம்

நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படிகளில் பதம் என்பதும் ஒருவகை, இதில் மூன்று வேறுபாடுகளுண்டு. பதவர்ணம் அல்லது சௌகவர்ணம் என்றும், ஸ்வரபதம் என்றும் பெயர். இவைகள் மூன்றுமே விளம்ப காலத்தில் பாடப்படும். குறிப்பாகப் 'பதம்' என்று அழைக்கப்படும் உருப்படி சவுக்க காலத்தில் தான் பாடப்படும். திச்ரதிருபுடை முதலிய தாளங்களில் அமைக்கப்பட்டிருக்கும்[1]. இவ்வகைப் பதங்கள் இசையின் ராக பாவங்களை மிக நுட்பமான முறையில் காட்டி நமது கர்னாடக இசையின் உண்மையான தத்துவங்களை உணர்த்தக் கூடியவனாக அமைந்திருக்கும் இசையும்-அபிநயமும் ஒவ்வொன்றைச் சார்ந்தே அமைக்கப்பட்டிருக்கும். இதனால் பாவ-அபிநய பதங்கள் இசைக்கலை வடிவமாகப் புகழ்பெற்று இசை வல்லுநர்களாலும் பின்பற்றப்பட்டிருக்கின்றது. பதங்களின் இசையை மிக்க சௌக காலத்தில் பாடவேண்டியுள்ளதால் ராகங்களின் கமகங்களை மெதுவாகவும், அழுத்தமாகவும், வெளிப்படுத்தும். இசைக்கருவிகளில் பதங்களைப் பாடிக்கொண்டு, வாசிப்பது வழக்கமாயிற்று. இப்பதங்களில் கமகங்கள் அதிகமாக இருக்குமேயன்றிச் சங்கதிகள் இரா.

பத சாகித்தியங்களை இயற்றக் கூடிய கவிஞர்கள் பன்மொழியில் நன்கு பயிற்சியுடையவர்களாகவும், அலங்கார சாஸ்திரத்தில் நல்ல பயிற்சியும், நாயக-நாயகியின் விஷயங்களைப் பற்றி நன்கு உணர்ந்தவர்களும், ராக-ரஸ உணர்ச்சியைச் சீராகத் தெரிந்தவர்களாயும் இருக்கவேண்டும். அப்போதுதான் உயர்தரமான பதங்களாகப் புகழ் பெறமுடியும். சாகித்தியம் (பாட்டு) மிக எளிதாக

1. இசை இயல் - க. பொன்னையாப்பிள்ளை

இருப்பினும், அதில் சில பகுதிகள் உட்கருத்துக்களைக் கொண்டவைகளாக இருக்கும். அப்படிப்பட்ட உட்கருத்துக்களை ஆடுவோர் தம் முகபாவத்தின் மூலமும்-ஹஸ்த முத்திரைகளின் மூலமும் மக்களுக்கு வெளிப்படுத்துவர்.

ஒரு பதத்தை ரஸித்து அனுபவிப்பதற்கு அது யாரால் பாடப்படுகிறது? எதற்காகப் பாடப்படுகிறது? பாடுவோரின் நிலை யாது? என்பன போன்ற செய்திகளை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். உயரிய பதங்களின் (பகிர்சிருங்கார-அந்தர் பக்தி) சாகித்தியத்தைக் காணும்போது வெளிப்படையாகச் சிருங்காரமாகவும். அதன் உட்பொருள் பக்திச் சுவையுடன் கூடியதாகவும் இருக்கும், நாயக-நாயகி பாவமே முக்கியமான அம்சமாக-அமைப்பாகக்கொண்டு இயற்றப்பட்டிருக்கும் பாடப்பாடப் புதுப்புதுக் கருத்துக்களையும், அபிநய முத்திரைகளையும் காட்டக் கூடியவனாக இருக்கும். பல்லவி, அனுபல்லவி-சரணம் போன்ற அங்க வேறுபாடுகளுண்டு. கடினமான பதப்பிரயோகங்கள் இருக்கக்கூடாது.[1] திராக்ஷா பாகமாகப் பதசாகித்தியங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

பதவர்ணம் அல்லது சௌககவர்ணம்[2]

இதுவும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறையுடன், சிட்டை ஸ்வர சாகித்ய ரூபமானது, பல்லவி, அனுபல்லவியிரண்டிலும் இரண்டு பாகமான வர்ண மெட்டமைந்த சாகித்தியம் அமைந்து பின் முத்தாயிஸ்வரம் பெறும். இது சௌக்க-மத்யம காலத்திலேயே பாடப்பெறும். சரணம் சாகித்யமாக இருக்கும். அதையடுத்து முதலில் சௌக்க கால ஸ்வரமும், இரண்டாவது-மூன்றாவது மத்யம கால ஸ்வரமும் வரும். இதில் வரும் சிட்டை ஸ்வரங்களுக்கெல்லாம் சாகித்யம் அமைந்திருக்கும்.

---

1. கீதகோவிந்தமும்-அதன் வழி நூல்களும். சரஸ்வதி மகால் நூலகப் பருவ இதழ்-32.

2. இசை இயல் - க. பொன்னையாப்பிள்ளை.

பதத்திலும், இராகமாலிகை போன்றவற்றில் காணப்படும் விசேஷமான இராகபாவம் இதில் காணப்படும். இதில் காணப்படும் சாகித்தியம் சிருங்கார ரஸத்தையே உணர்த்தக் கூடியதாக இருக்கும். இதில் அமைந்திருக்கும் சிட்டை ஸ்வரங்கள் ஒவ்வொன்றும் இராகபாவம் அமைந்து, தான ஒழுக்கத்தோடு கூடியிருக்கும் சில வர்ண ஸ்வரங்களில் தைவதாந்தியம், பஞ்சமாந்தியம் வரும். எந்த உருப்படிகளிலுமே இல்லாத இராக சஞ்சாரம் இந்த பதவர்ணத்தில் காணப்படும். இவற்றில் சில சித்திரமார்க்க காலத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சம்பிரதாய முறையில் சிட்டை சொல்லிவைக்கும் போது தானவர்ணம் முடிந்தபின் இவ்வர்ணங்களைச் சொல்வது முறையாகும். இதனால் லய ஞானமும், ராக பாவ ஞானமும் தெளிவாக உண்டாவதோடு, ஸ்வரம் பாடும்போது இராக பாவத்தோடுதான் பாடவேண்டும் என்ற உணர்ச்சியும் பாடகனுக்கு நன்கு ஏற்படுகின்றது.

சுரபதம்[1]

இது பல்லவி அநுபல்லவியோடு ஸ்வர எழுத்துக்கள் அர்த்த பாவம் தோன்றும்படியாக நல்ல வர்ணமெட்டில் அமைக்கப்பட்டிருக்கும். பல்லவி, அநுபல்லவிகளுக்குப் பிறகு சிட்டைஸ்வரம், அதற்கு சாகித்யமும் சேர்க்கப் பட்டிருக்கும் இம்மாதிரியில் சில வர்ணங்களே இருப்பதாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட பதவர்ணம், சுரபதம் போன்ற அமைப்புகளில் மன்னன் சகஜி பல பாடல்களைப் பாடியுள்ளான்.[2] இவற்றைப் பற்றிய ஆராய்ச்சி இங்கு அவசியமற்றது என்பதால் இங்கு விளக்கவில்லை.

---

1. இசையில்-க. பொன்னையாப்பிள்ளை.

2. 17ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் பரதநாட்டியக்கலை
-ந. விசுவநாதன், தெலுங்குப்பண்டிதர், சரசுவதி மகால் நூலகப் பருவஇதழ்-35

பத சாகித்தியங்களின் வளர்ச்சி

ஆண்டவனை அடையும் வழிகளில் சிறந்த வழி நாதோபாஸனை. இந்த நாதோபாஸனையால்தான் மனதை ஒரு நிலைப்படுத்தமுடியும்.எனவே இசையாலேயே இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள் இந்த புண்ணிய பாரதத்தில் பலராவர். இசையை வழிபட்டவர்கள் இறைவனைத் தன் தலைவ(நாயக)னாகவும், தன்னைத் தலைவி(நாயகி)யாகவும் கொண்டு வழிபட்டனர். இதனை நாயக-நாயகி பாவம் என்று கூறுவர். இவ்வகையில் பலருடைய பாடல்கள் அகச்சான்றுகளாக இருக்கின்றன. இறைவனை அடைவதற்கு வழி திடமான அன்பே. அந்த அன்பும் (ப்ரேமையும்) அளவு கடந்து ததும்பவேண்டும் என்பதே அடிப்படை. நாயகன் என்ற சொல் பரமான்மாவையும் நாயகி என்னும் சொல் ஜீவான்மாவையும், சகி(தோழி) என்னும் சொல் பரமான்மாவுடன் ஜீவான்மாவை இணைத்துவைக்க முயலும் ஞானகுருவையும் குறிக்கும். நாயகனைக் காணாது வருந்தும் நாயகியின் மனோநிலையும், கடவுளைக் காணாது வருந்தும் பக்தனின் மனோநிலையும் ஒருவாறு ஒத்திருக்கும். இத்தத்துவத்தை வெளிப்படுத்துவதே ஸ்ரீமத் பாகவதத்தில் காணப்படும் ராஸக்கிரீடை, கோபிகாகீதம் போன்ற பகுதிகள்.

ஆக, நாயக-நாயகி பாவத்தில் எழுந்த முதல் இசைப்பாட்டு ஜயதேவரியற்றிய 'கீத கோவிந்த மகா காவியம்'. இந்தப் பாடல்களே 'பதங்கள்' தோன்ற -இயற்ற முன்னோடி எனின் மிகையில்லை. இதன் அமைப்பைப் பின்பற்றி தெலுங்கு நாட்டில் க்ஷேத்திரீயரும், கன்னடத்தில் புரந்தரவிட்டலரும் பல பதங்களை இயற்றியவர்கள். இவர்களே பதசாகித்தியங்களை இப்படித்தான் அமைக்கவேண்டும் என்ற ஒரு வழியை, மரபைப் புகுத்தியவர்கள். இவர்களுடைய வழியைப் பின்பற்றியே பின்வந்த புலவர்களும் பதசாகித்தியங்களை அமைத்துள்ளனர் எனின் மிகையில்லை.

புரந்தர விட்டலர், க்ஷேத்ரக்ஞர் ஆகியோர் இறைவன் மீது பாடியுள்ள பதசாகித்தியங்களில் சில நாயக-நாயகி பாவத்தை அடிப்படையாகக்கொண்டு பாடியுள்ளனர். இவை 14 - 15 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த பத சாகித்தியங்கள். ஆனால் காலஞ்செல்லச் செல்ல இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடிய கவிஞர்கள், மன்னனையோ அல்லது ஜமீன்தார்களையோ பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடலாயினர். அங்ஙனம் தஞ்சை மன்னர் இரண்டாம் சகஜியைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பாடியவையே இந்த நூலில் காணும் பல தமிழ்ப்பதங்கள்.

இதனைக் கருதுமிடத்தில் - பதங்களின் அமைப்பு புலவனுக்கும் அரசனுக்கும் உள்ள உறவினைக் கூறுகிறது. இங்கு கலையே காதலாகிறது. சகஜி மன்னனும் சிறந்த புலவர். இருவரிடத்திலும் இருக்கும் பொதுத்தன்மை கலைக்காதலே அல்லது மொழிக்காதலே, புலவனிடம் பக்தியாகின்றது. அரசர், புலவரிடையே மகிழ்ந்திருந்த காட்சியெல்லாம் கூறுகின்றனர். அரசனைக் காணமுடியாது தவிக்கும் புலவன், காதல் வயப்பட்ட பெண்போல் ஆகிறான். அரசனைக் காணத்துடிக்கிறான், தோழியாகக் கவிதை இவனுக்குக் கைகொடுக்கிறது. தன் கவிதைத் தோழியைத் தலைவனிடத்துத் தூது அனுப்புகிறான் புலவன், அரசனும் இக்கவிதைத் தோழியின் சொல்கேட்டு மனமிறங்கிப் புலவனுக்குக் காட்சி தந்து மகிழ்ச்சியைத் தருகிறான். பிரிந்தவர் கூடுகின்றனர். காதல் வெற்றிகொண்டு கலந்தது போல் இவர் இதயத்துக் குடியிருக்கும் மொழி-கலை ஒன்றுசேர்கிறது. இலக்கிய வாழ்வில்- கலைவாழ்வில்- வெற்றிபெறுகின்றனர்[1] என்ற கருத்து இங்கும் ஏற்புடையதாகின்றது.

தமிழில் பதங்கள்

இன்று கிடைத்துள்ள தமிழ்ப்பதங்களைக்கொண்டு கணிக்கும்போது முத்துத்தாண்டவர் இயற்றிய அபினய

1. சாகராஜ அஷ்டபதி-Er. T.R. தாமோதரன்-முகவுரை

பதங்களே காலத்தால் பழமையானவை என்று கருதமுடிகிறது. இவருக்குப்பின் 'வாசுதேவகவியின்' பாடல்களைக் கூறலாம். இவருடைய காலத்தில் வாழ்ந்த இராமபாரதியும் பல பதங்களைப் பாடியுள்ளார் என்பதை முன்பு கண்டோம். இவர்களிருவருமே சிருங்கார பதங்களை இயற்றியவர்கள். இவர்களைப் பின்பற்றியே தமிழில் பத சாகித்தியங்களை இயற்றும் வழக்கம் ஏற்பட்டது. இங்ஙனம் இவர்களுக்குப் பின், பிக்ஷாண்டார் கோவில் சுப்பராமையர், கனம் கிருஷ்ணய்யர், பரிமளரங்கன், மூவலூர் சபாபதி ஆகியோர் பதங்களைப் பாடியுள்ளனர்.

பதங்களின் முத்திரைகள்

பாடல்களை இயற்றும் கவிஞர்கள் (சாகித்ய கர்த்தாக்கள்) அப்பாடல்களில்(சாகித்தியங்களில்) தங்களது பெயர் அல்லது புனை பெயர்களைக் குறிப்பிடுவது வழக்கம். இதனை சாகித்தியகர்த்தாவின் முத்திரை என்று அழைப்பது வழக்கம். இதன்படி இக்கவிஞர் தனது இயற்பெயரான 'வாசுதேவ' பதங்களில் குறிப்பிடுகிறார்.

இவருடைய பெயரே (முத்திரை) இல்லாத சில பாடல்களும் இருக்கின்றன. அவற்றைக் கூர்ந்து ஒப்புநோக்கும் போது அவைகளும் இக்கவிஞருடைய பாடல்களே என்பதை உணரமுடிகிறது. விளக்கம் வருமாறு.

முன்னெதுகை

முத்திரையுள்ள பாடல்

தோடிமு காரிகள்
பாடிவி னோதமாய்
கூடிமுன் போல்விளை
யாடிமுத் தாடவே
-எடுப்பு: வாடிவாய் முத்தம்-பக்..31

---

1. Tanjore as a seat of Music Dr. S. Seetha, P. 131

முத்திரையற்ற பாடல்

வாரான் குவிமுலையில்
சேரான் இங்கிதந்
தாரான் என்முகம்
பாரான் திருவல்லை
யூரான் சண்முகன்
-எடுப்பு: பேராசை நீரானோ-பக்.5

பின்னெதுகை

முத்திரையுள்ள பாடல்

மல்லிகை சுகந்தங்கள் கூட
மதுரமாகவே இசை பாட
அல்லிலெத்தனைக் கூட
அமுத நிலைகள் நாட
வில்லியும் பயந்தோட
விசித்திரமாய் விளையாட
-எடுப்பு: இப்போ வரச்சொல்லடி-பக். 4

முத்திரையற்ற பாடல்

மன்னுமுன் கிருபைதான் கஞ்சம்
வண்டுநேராமென் நெஞ்சம்
என்னையாளாது கொஞ்சம்
கன்னியமிர்த பிஞ்சம்
உன்னையல்லால் பிரபஞ்சம்
பின்னைவேறுண்டோ தஞ்சம்
-எடுப்பு: தேவியுன் பாதம்-பக். 4

மோனையுடன் பின்னெதுகை

முத்திரையுள்ள பாடல்:

அன்னைவசனந் தடுத்து
ஆசையாய் மடலெடுத்து
உன்னைச்சதமென் றடுத்து
ஊரோமலானேன் விடுத்து
-எடுப்பு: மோடி ஏனையா?-பக். 21

முத்திரையற்ற பாடல்

அந்தநாளில் சொன்ன பேச்சு
ஆணையும் வீணே போச்சு
உந்தன் மையல் கொண்டு மேச்சு
ஓர்நாளோருக மாச்சு

-எடுப்பு: என்னதான் கோபம்-பக். 1

ஆதலால் வாசுதேவகவி இயற்றிய பாடல்களில் சில பாடல்கள் முத்திரையுடனும், சில பாடல்கள் முத்திரை யில்லாமலும் இருக்கின்றன. மேலும் இப்பாடல்கள் அனைத்தும் தமிழ்ப் பாடல்களாயினும் தெலுங்கு எழுத்திலேயே எழுதப்பட்டு ஒரே சுவடியில் காணப்படுவதால் அனைத்துப் பாடல்களுமே வாசுதேவகவியின் பதங்களே என்று கருதுவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

நூலாராய்ச்சி

சரித்திரக் குறிப்புகள்

மராட்டிய மன்னர்களின் ஆட்சியிலேயே மிகச் சிறப்பாக ஆட்சிசெய்தவன் இரண்டாம் சகஜி. இவனுடைய காலத்தை பொற்காலம் என்று கூறலாம். மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். பலகலைகளும் பேணிக்காக்கப்பெற்றன. இம்மன்னனுடைய காலத்தில்தான் பல இலக்கிய, இலக்கண,சாஸ்திர, சங்கீத நூல்கள் தஞ்சையில் தோன்றின. பல நாடகங்கள் தோன்றின. இவனுடைய காலத்தில் தோன்றிய தமிழ்க் குறவஞ்சி நூல்களே தற்போது கிடைத்துள்ள நூல்களிலேயே காலத்தால் பழமையானவை. இதனால் குறவஞ்சி பிரபந்தம் மறுமலர்ச்சி அடைந்தது. இவனது காலத்தில் பல தமிழ்ப் பதங்கள் இயற்றப்பட்டன. நாட்டியத்தின் தொன்மையான மரபு பேணிக்காக்கப்பட்டன. இவனது காலத்தில் சம்ஸ்கிருதமும், தமிழும் வளர்க்கப்பட்டன. இவனது அரசவையில் தினந்தோறும் பல வியக்கத்தக்க விநோத கேளிக்கைகள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. புலவர்களின் புதுப்புது நூல்கள் அவையில் அரங்கேறின. இப்படிப்பட்ட அரசவையைப் புகழுகிறார் கவிஞர்.

"சந்தமும் உன்னுடைய சபையில் அதிசயமும்
இந்த வைபவமும் எவர்க்கும் எளிதோ ?"
-எடுப்பு: சமூகம் கண்டேனே-பக். 52

"கட்டியத் தொனி முழங்கக் கவிவாணர் கொண்டாட
நட்டணையுடன் மடந்தையர் நடனம் புரிய
மட்டுலாவும் சங்கீத வாத்தியம் முழங்கும் சபையில்"
-எடுப்பு: மின்னார்-பக். 58

கோபால சக்கரம்

தஞ்சை நாயக்க மன்னர்கள் தங்களுடைய வழிபாடு கடவுளாக மன்னார்குடி ராஜகோபால ஸ்வாமியைக் கொண்டிருந்தனர். இப்பெருமானையே தங்களுடைய தங்க-செப்பு நாணயங்களில் பொரித்தனர். (இதில் ஒருபக்கம் செண்டு என்னும் ஆயுதமேந்திய ராஜகோபாலனும், ஒரு பக்கம் விஜயராகவன் தொழுது நிற்கும் கோலமும் கொண்டிருக்கும் இக்காசு) இதனால் இக்காசு கோபால சக்கரம் என்று அழைக்கப்பட்டது. இந்தக் காசு நாயக்கமன்னரின் ஆட்சி தஞ்சையில் வீழ்ச்சியடைந்தபின், மராட்டியரின் ஆட்சியில் சகஜியின் காலத்திலும் செலாவணியில் இருந்திருக்கிறது என்பதை கீழே காணும் வரியால் அறியமுடியும்.

"கோபால சக்கரப் பொன் கையில் காணாவிட்டால்"
-எடுப்பு: பொதுமாதராசை-பக். 63

ஜுல்பிர்கானின் படையெடுப்பு

டில்லி பாதுஷா ஔரங்கசீப் தனது தளபதி ஜுல்பிர்கானை செஞ்சியின்மீது போர்தொடுக்க பெரும்படையுடன் அனுப்பினான். அப்போது செஞ்சியை ராஜாராமன் (சத்ரபதி சிவாஜியின் மகன்) ஆட்சி செய்துகொண்டிருந்தான். இதனால் ஜுல்பிர்கானுடன் போர் தொடுக்க தனக்கு படைகொடுத்து உதவி செய்யுமாறு மன்னன் சகஜியை கேட்டுக்கொண்டான். செஞ்சி மன்னன் ராஜாராமின் கோரிக்கையை நிறைவேற்ற, தஞ்சையிலிருந்து பெரும்படையை செஞ்சிக்கு அனுப்பி உதவி செய்தான். செஞ்சிப்படையுடன் தஞ்சைப்படையும் இணைந்து போர்தொடுக்க அதில் (ஜுல்பிர்கான்) டில்லிப்படை தோல்வியைத் தழுவியது என்பவை சரித்திரச்செய்திகள். இந்தப்

போரில் பங்குகொண்ட முக்கியமானவர்கள் ஜுல்பிர்கான், தாவுத்கான், யாசமநாயக்கன், அல்லி மருத்கான், காம்பர்சி, லதிப்ஷானா, அஸத்கான், காசிம்கான் ஆகியோர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களுடைய பெயர் குறித்த பாடல் 'கிட்டிவந்த மருவார் 'என்ற தலைப்பில் (சுவடி எண். B. *11649*-ஏடு எண். 59 B) காணப்படுகிறது. வரலாற்றுத் தொடர்புடைய இப்பாடல் சிலகாரணங்களால் இப்பதிப்பில் இடம்பெறவில்லை.

இந்த சரித்திர முக்கியத்துவம் உள்ள போரைக்குறித்து இம்மன்னனுடைய காலத்தில் தோன்றிய (சம்ஸ்கிருதம்- தமிழ் ஆகிய) நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதைப் போலவே இந்தப் பதங்களை இயற்றிய வாசுதேவகவியும் "தப்பியோடிப் போங்கள்-முகலரே" என்ற பல்லவி அமைந்த பதத்தில் குறிப்பிடுகின்றார்.

மேலும், வேலூர்-செஞ்சி முதலிய பகுதிகளில் நடைபெற்ற போரைப்பற்றிய செய்திகளைக் குறித்து "நிறையூர் வடிவழக நம்பி மீது" இயற்றிய பதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் ' வருதை சேனாதிபன் ' ராசை முத்துவீரர், தளவாய் நரசேந்திரன் ஆகியோர் மீது பதப்பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. இவர்கள் யார்? இவர்களின் நிலை யாது? என்பவைகளை அறியமுடியவில்லை.

மணிப்பிரவாளப் பதங்கள்

இவர் பல பாடல்களில் சம்ஸ்கிருதச் சொற்களைக் கையாண்டுள்ளார், (தெலுங்கு-தமிழ்) மணிப்பிரவாளப் பாடல்களையும் பாடியுள்ளார்.

இபகும்பம் இவள் தனத்துக்கிடு - நீனிகி
ஈ ஜகதுலோ லேது ஜோடு
அபரஞ்சியாலிழைத்த தோடு -நீரு
ஆகுல மைனதி ஓ அய்ய நாதோடு
- எடுப்பு: உமக்கேத்தவகைக்காரி பதம்: 34

மேலும் தெலுங்கு மகளொருத்திக்கும்-தமிழ் மகளொருத்திக்கும் உரையாடல் போல் ஒரு பாடல்

அமைக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் காலத்தில் நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளில் சம்வாததரு என்ற பெயரில் ஒரு நடனம் நடைபெற்றுள்ளது. அங்ஙனம் அமைந்த பாடலொன்றில் தெலுங்கும் தமிழும் மாறி மாறி வந்து மணிப்பிரவாள நடையில் அமைக்கப்பெற்றுள்ளது. இதனை அந்தாதித் தொடராக பாடல் முழுதும் அமைந்திருப்பது சிறப்பாக உள்ளது.

தமிழ் மகள்

ஆதி நாள் முதல் என்னை அணைந்த சாகேந்திரனை
தூது விட்டழைத்தது துணிவோ வடுகச்சி ?

தெலுங்கு மகள்

வடுகச்சி யனி செப்புதாவு அரவதா நா
படுசுநிம்மனி நீதோ பலுககு வொச்சிநி ?

-எடுப்பு: ஆதிநாள் முதல் பதம் எண்: 78

சந்தக்குழிப்புள்ள பதம்

இந்நூலாசிரியர் பாடியுள்ள வாடி வாய்முத்தந்தாடி (பதம் எண். 32) என்ற பதத்தை சாதாரணமாக பதம் போலவும், அதேசமயம் சந்தப்பாடலாகவும் பாடியுள்ளார். இதில் காணப்படும் அனுபல்லவிகள் பல்வேறு சந்தங்களுடன் காணப்படுகின்றன. அவற்றைச் சந்தக் குழிப்புக்களுடன் கீழே காணலாம்.

பதம்: தோடி முகாரிகள் பாடி வினோதமாய்க்
கூடி முன்போல் விளையாடி முத்தாடவே(1)

சந்தம்: தானன தானன தானன தானனா
தோடிமு காரிகள் பாடிவி னோதமாய்க்
கூடிமுன் போல்விளை யாடிமுத் தாடவே,

பதம்: பந்து நிகர்த்த தனந்தனில் சந்த-சு
கந்தப ணிந்து மகிழ்ந்து கலந்தனை (2)

சந்தம்: தந்தன தந்தன தந்தன தந்தன
பந்துனி கர்த்தத னந்தனில் சந்தசு
கந்தப ணிந்தும கிழ்ந்துக லந்தனை

பதம்: இந்த வசந்த தினந்தனில் அந்தம
தந்தனு சிந்தலர் வந்திட நொந்தனன் (3)

சந்தம்: தந்தன தந்தன தந்தன தந்தன
இந்தவ சந்ததி னந்தனில் அந்தம
தந்தனு சிந்தலர் வந்திட நொந்தனன்,

பதம்: கைக்குள் நெருக்கி வருக்கை சருக்கரை
மிக்க முருக்கிதழ் இக்கணமே தர (4)

சந்தம்: தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன தத்தன தானன
கைக்குள்நெ ருக்கிவ ருக்கைச ருக்கரை
மிக்கமு ருக்கிதழ் இக்கண மேதா

பதம்: உத்தமுரைத்தலர் மெத்தையில் வைத்தொரு
முத்து நகைத்தெனை நித்தம் அணைத்திட

சந்தம்: தத்தன தத்தன தத்தன தத்தன
உத்தது ரைத்தலர் மெத்தையில் வைத்தொரு
முத்துந கைத்தெனை நித்தம ணைத்திட

மன்னார்குடிப் பதங்கள்

மன்னார்குடியிலிருந்து அருள்பாலிருக்கும் அருள்மிகு கைலாசநாதர் (பதம்-3) பேரிலும், அருள்மிகு ராஜகோபால ஸ்வாமி (பதம்: 14) பேரிலும் ஆக இரண்டு பதங்களும், ராசைமுத்துவீரர் பேரில் (பதம்-12) ஒரு பதமும் ஆக மூன்று பதங்கள் பாடியுள்ளார் வாசுதேவகவி.

ராசை என்பது மன்னார்குடியின் பல பெயர்களிலொன்று. கைலாசநாதராலயம் சோழ மன்னர்களின் காலத்தே நிர்மாணிக்கப்பட்ட பழம்பெருமை வாய்ந்தது. செண்டலங்காரன் என்பது ராஜகோபால ஸ்வாமியைக் குறிப்பது.

தமிழக மன்னர்கள் பயன்படுத்திய பல்வேறு விதமான ஆயுதங்களில் செண்டும் ஒன்று. அது எப்படி இருக்கும் என்பதற்கு அகச்சான்றாகத் திகழும் இந்த ஆயுதத்தைக் கையில் ஏந்தியுள்ளான் ஸ்ரீ ராஜகோபாலன். இதனாலேயே இவருக்குச் செண்டலங்காரன் என்ற பெயருண்டாயிற்று.

இந்நூலில் காணப்படும் உவமைகள்	**பதம் எண்கள்**
ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாற்போலே	25
ஆனை கண்ட கதை போல	69
ஆனைபோற் கண்டவர் பூனைபோற் பார்ப்பாரோ	18
ஓதிமநடை	52
கையில் நெல்லிக்கனி போலே	3

தேடிய பொருள் கையில் சிக்கனாப் போலே 25
தேனும் வேம்பும் கலந்தால் இத்திப்பாகுமோ 69
நிதிகண்ட யாசகன் போல் 60
மத்தகஜமும் மாவுத்தன் வார்த்தைக்கடங்குதல் போலே 25
மதிகண்ட குமுதம் போல் 60
மணமும் மலரும் போலே 24
மலரைத் தேடிய வண்டுபோல் 16
ரவிகண்ட வாரிஜம் போல் 60
வடவைபோலெண்ணி 49
வண்டு நேராமென் நெஞ்சம் 5
வன்னிமுன் மெழுகு போலே 41
வாசமலரை நாடிவரும் அளிபோலே 67
வாரிஜம் கண்ட மயில் போல் 60
வானில் ரவியைக் கண்டலரும் கமலம்
வஞ்சியே மின்மினியைக் கண்டு அலருமோ ?
தானே சந்திரனைக் கண்டுருகும் காந்தக்கல்
சந்திரசோதியைக் கண்டுருகுமோ ? 18
வெள்ளங்கொண்டு போறாப் போலே 66

பழமொழிகள்

அடிக்கும் காத்துக்கெல்லாம் படல் கட்டக்கூடுமோ? 48
ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாற்போல் 25
ஆடுதிருடின கள்ளன்போல் பார்வை 44
ஆனை உண்ட கனிபோலே 12
ஆனை கண்ட கதை போல் 69
ஆனை போற்கண்டவர் பூனைபோற் பார்ப்பாரோ 18
உழக்கில் கிழக்கு மேற்குண்டோ 53
எள்ளுவிழ இடமில்லை 70
கரிராஜன் அருந்திய கபித்தம் போல 19
கையில் நெல்லிக்கனிபோல் 3
தேடிய பொருள் கையில் சிக்கினாப்போலே 25
தேனும் வேம்பும் கலந்தால் இத்திப்பாகுமோ ? 69
தோளிலிருந்து மெள்ளச் செவியைக் கடித்ததுபோல் 43
பத்திலே பதினொன்றாய்ப் பாராமல் 60
நாலுவழிதேடி ஓடி நரிபோல் பதுங்கி 71

மத்தகஜம் மாவுத்தன் வார்த்தைக் கடங்குதல்போல்	26
வளர்த்தகடா மார்பில் பாய்ந்தது போல்	43
வன்னிமுன் மெழுகுபோல்	41
வாசமலரை நாடி வருமளி போலே	67
வெட்டிக் கழுகுக்கு விருந்து போட	71
வெண்மழை கண்ட பயிர்போலே	60
வெள்ளங்கொண்டு போறாப்போலே	66
வேலி பயிரழித்தால் விளையுமா?	54

முதலியன

தமிழன்பு

தமிழினால் துதித்து (19) செந்தமிழ் நிபுணன் (38) செந்தமிழ் (18) வடிதமிழ் (66) தேடரிய தமிழ் (72) குளிர் தமிழ் (50) சொரி தமிழ் (48) நந்தமிழ் (61) தெள்ளு தமிழ் (70).

சோழேசன்

சோழர்களிடையே நாடான தஞ்சைத்தரணியை ஆட்சி செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் சோழர் என்றே அழைக்கும் மரபு புலவர்களிடம் காணப்பட்டுள்ளது. இதற்குச் சான்றுகள் பல உள்ளன. உதாரணமாக சகஜி மன்னன் மராட்டியர் குலத்தைச் சார்ந்தவராக இருந்த போதிலும் இம்மன்னன் இவன் காலத்து வடமொழி இலக்கியங்களிலும், செப்பேடுகளிலும், சரபோஜி மன்னர்காலத்து கல்வெட்டுக்களிலும் காணமுடிகிறது. இம்மரபைப் பின்பற்றி இந்நூலாசிரியர் சகஜி மன்னனை சோழேசன் என்றே அழைக்கிறார். சோழதேச மகாராஜ! (51), விஞ்சு சோளேச! (56), சோழநாத (47), சோழ ராச்சியம் செங்கோல் நடத்தும் (59), சோழேந்திரனே (16), சோளேந்திரனே! (45), சோழதேச பாலனசதுர (65), அளகை வேந்தன் (63, 74)

மன்னனைப் புகழும் அடைமொழிகள்

கொடைக்குக் கர்ணன் (42)
கனகவிபூஷணம் வாரணம் சிவிகை கவிஞர்க்கருள் கர்ணன் (18)
சத்ரு சம்ஹார தீர (17)
சத்யபாஷா அரிச்சந்திரன் (45)
சங்கீத லோலன் (15, 37)

செஞ்சொல்வாணர்க்காதாரா ! (65)
செந்தமிழ்வாணர்க்குபகார (57)
நதி அளந்துண்ட கண்ணன் நிகர் (68)
தப்புரையாத சகஜிராஜன் (71)
துட்ட நிக்ரக சீல சிட்டன் (71)
நவரஸாலங்கார காவ்ய ரஸிக (29)
நானாகலா ப்ரவீண! நாத! சகஜிபூப!-(69)
பூலோகதேவேந்திரனே![1] (64)
த்யாகராஜர் பதம் தொழும் தீர ! (29)

பதத்தின் முத்திரைகள்

வாசுதேவன் கவியுகந்த சாகேந்திரன் (23)
வாசுதேவன் கவியிலே மகிழ் (26)
வாசுதேவன் மேல் அன்பாம் அனுகூலன் (27)
வாசுதேவன் கவியே சொல்லும் (32)
வாசுதேவன் சொல்லும் ஆகவினால் (33)
வாசுதேவகவி தினம் துதிக்கும் போஜ (34)
வாசுதேவன் கவிமேல் நேசம் (43)
கவி வாசுதேவ நுத (46, 58)
வாசுதேவன் புகழும் ராச (46)
குளிர்தமிழ் வாசுதேவன் பதம் (50)
கவி வாசுதேவன் மீது நேயா (53)
வாசுதேவ கவி செஞ்செல்லால் மகிழும் (56)
வாசுதேவன் மேலன்பு வைத்த தீர ! (57)
வாசுதேவகவி விநுத (58)
நந்தமிழ் வாசுதேவன் புகழ் (61)
தமிழ் வாசுதேவன் புகழ் (66)
மாநிலமெல்லாம் புகழ் வாசுதேவன் (69)
அருள் வாசுதேவன் (73)

வள்ளுவர் பற்றிய குறிப்பு

இவர் திருக்குறளில் மிகுந்த பற்றுக்கொண்டு, அதில் தோய்ந்த அனுபவமுள்ளவர் என்று அறியமுடிகிறது. நேசமில்லா பெண்கள் (பதம்-69) என்று ஆரம்பிக்கும் பதத்தில்:

1. "பூலோகதேவேந்திர விலாஸம்" என்ற பெயரில் சகஜி மன்னன் மீது இயற்றப்பெற்ற நாடகமொன்றுள்ளது என்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது.

'மையாகும் விழியார்தன்
மனதறியாத யோகம்
சையோக மல்லவென்று
தமிழ்வள்ளுவர் சொல்லினர்'

என்றசரணத்தில் காணும் வரிகள் வள்ளுவனுடைய கருத்தைப் பின்பற்றி இயற்றியுள்ளார். திருக்குறளில் காணப்படும்

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்னும் குறளில் காணப்படும் கருத்தையொட்டி இது அமைக்கப் பெற்றுள்ளது. இதில் " கூடுதல் - ஒத்த அளவினராதல். முதிர்ந்த துனியாய வழித்துன்பம் பயத்தாலானும், முதிராத புலவியாய வழிக் கலவியின்பம் பயவாமையானும் இரண்டிற்கும் இடையாகிய அளவறிந்து நீங்குதல் அரிது" என்பது பற்றிக் கூடி முயங்கப்பெறின் என்பது பரிமேலழகர் உரை. இக்கருத்தை இச்சரணத்தில் உரிய இடத்தில் பொருத்தியுள்ளார் வாசுதேவகவி.

இந்துஸ்தானி மொழிச்சொற்கள்

இருகையாலும் சலாம் செய்து (23) வாஹ்ரே !
(அந்தாதிப்பாடல் 78)

அடுக்குச்சொற்கள்

பட பட (44) உருகி உருகி (14)
வருவீர் வருவீர் (15) கொஞ்சி கொஞ்சி (13)
வந்து வந்து (35) ராம ராம (68, 73)
கூகூவென்று (13) சுத்திசுத்தி (71)
சு தினம் சு தினம் (60) சொன்னேன் சொன்னேன் (54)

நியாயங்கள்

காகதாளீய நியாயம் (63)

ஊர்ப்பெயர்கள்

ஸ்ரீரங்கம் (45) சாஞ்சீ (34) மன்னார்கோவில் (47) விஜயாபுரம்(65, 10) தஞ்சை (21, 26) தஞ்சாபுரீ (65) வேலூர் (10) வள்ளாளபுரம் (10) சந்திரகிரி (10) லாடபுரம் (10) அத்தினாபுரம் ((10) டில்லி (71) வருதை (11) ராசை (12) திருவாரூர் (30) செஞ்சி(41)

தேசங்கள்

காந்தாரதேசம் *(10)* பல்லவதேசம் *(10)* அங்கதேசம் *(10)* கர்நாடகதேசம் *(45)* கல்யாணதேசம் *(10)* கலிங்கதேசம் *(10)*

தெருப்பெயர்

கொங்கணேஸ்வரன் தெரு *(34)*

இராக தாளப்பெயர்கள்

தோடி *(33) (39)* முகாரி *(33)* பூபாளம் *(70)* தேவகாந்தாரி *(70)* தேசாதிதாளம் *(70)*

மரபுச்சொற்கள்

இதிகை *(21)*

சுவடியின் வரலாறு

இந்த நூலகத்தின் சம்ஸ்கிருதப் பிரிவில் டாக்டர் பர்னல் கேட்டலாக் எண். 11649ல் வாசுதேவகவியின் பாடல்களைக் கொண்ட சுவடி பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்மொழிப் பாடல்களைத் தெலுங்கு எழுத்தில் எழுதியுள்ளனர். இச்சுவடியில் 94 ஏடுகள் இருக்கின்றன. இச்சுவடியைத் தமிழ்ப் பிரதி செய்து வைக்கப்பட்டுள்ளது. (copied vol.813) இவற்றை வைத்துக் கொண்டு இந்நூல் வெளிவருகிறது. இதில் பல பாடல்கள் குறைந்தும் நிறைந்தும் இடம் மாறியும் காணப்படுகின்றன. அந்தந்தப் பதங்களுக்கு உரிய ராக-தாளங்கள் காணப் படவில்லை. இதனால் எனது அனுபவத்திற்குரிய முறையில் இராக - தாளங்களைக் குறித்துள்ளேன். இசையாராய்ச்சி செய்ய உதவியாகப் பதங்களைப் பிரித்து உரிய முறையில் வெளியிட்டுள்ளேன். தலைவி என்னும் சொல் ஒப்பாரு மிக்காருமின்றியிருப்பவளையே தொல்காப்பியம் கூறும். ஆனால் இங்கு நான் குறித்துள்ள தலைவி என்னும் சொல் நாயகி என்பதையே குறிக்கும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றியுரை

இந்தப் பதசாகித்தியங்களின் சிறப்பைக் குறித்துப்பலர் ஆய்வு செய்திருந்தபோதிலும் இந்நாள்வரை இந்தப் பதசாகித்தியங்கள் அச்சில் வெளிவரவில்லை. மேலும், இந்த

அரண்மனைப் புலவனாக வாழ்ந்த வாசுதேவகவி பாடியுள்ள ஒரே ஒரு சுவடிதான் இந்த சரஸ்வதி மகால் நூலகத்தில் இருக்கிறது. இந்த நூலை வெளியிடவேண்டும் என்ற ஆவலை முதன் முதலில் தூண்டியவர் எனது அருமை நண்பரும், இந்நூலகத்தின் தெலுங்குப்புலவரான திரு. என். விசுவநாதன் அவர்கள், அவர்களின் துணையுடன் இந்நூல் மூலச்சுவடியுடன் ஒத்துப் பார்க்கப்பட்டது. அன்னாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய இந்நூலகத்தின் முன்னாள் இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி O. P. சோசம்மா, இ. ஆ. ப., அவர்களுக்கும் இந்த நூலுக்குச் சீரிய முறையில் அணிந்துரை நல்கிய இந்நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான உயர்திரு T. R. ராமசாமி, இ.ஆ.ப., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் பதிப்பிக்க உரிய உதவிகளைப் புரிந்த இந்நூலக நிருவாக அதிகாரி உயர்திரு அ. பஞ்சநாதன், எம்.ஏ.,பி.லிப்.எஸ்சி., அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நூலை அழகுபட அச்சிட்டுக்கொடுத்துள்ள தஞ்சை திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாம் சகஜி மன்னன் முடிசூடிக்கொண்ட 300 ஆவது ஆண்டான இவ்வாண்டு இந்த தமிழிசைப் பாடல்களும் நாட்டியப் பதங்களும் வெளிவருவது சாலப்பொருத்தம். இதிற்காணும் குற்றம் குறைகளைக் குறித்து எமக்கு எழுதித் தெரிவித்தால் அடுத்துவரும் பதிப்பு திருந்திய பதிப்பாக வெளிவர அது உதவும். எல்லாம் வல்ல இறைவன் இது போன்ற நற்பணிகளை மேலும் மேலும் செய்ய அருள்புரிவானாக.

அன்பன்,

வித்வான் **ந. சீனிவாசன்,**
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
14-6-85.

செண்பை நகர் ஆடவல்லான் மீது பதம்

பதம் - 1

இராகம்: **வசந்தா** | தாளம்: **ஆதி**

பல்லவி

என்னதான் கோபமென்மேல்? (என்ன)

அனுபல்லவி

அன்னமுலாவுஞ் **செண்பை**
ஆடவல்லீசனாரே! (என்ன)

சரணங்கள்

1) மாரன் பூங்கணை எய்ய
வடவார் தினமும் வெய்ய
வாரீரொரு பூசல் செய்ய
வாடி நான் ஏது செய்ய
தொழு மாமுனி வாடிவதங்க
மழு கூரிலை மாமுக லிங்க
புழுகாயிலி வீதிவிடங்க
அழகிய நாயகி பங்க துங்க
தல்லாங் கிடதக கிடதரி கிடகிட
தாதிக்க தோதிக்க தக்கதின்ன தகதிரா. (என்ன)

2) அந்த நாளில் சொன்ன பேச்சு
ஆணையும் வீணே போச்சு
உந்தன் மையல் கொண்டுபோச்சு
ஒரு நாளொருக மாச்சு
கரியுரி கம்பளந்தரி வேத
அரிபணியும் பாத விநோத
பரிமளசேட பரிபுர னாத
... .
தல்லாங் கிடதக கிடதரி கிடகிட
தாதிக்க தோதிக்க தக்கதின்ன தகதிரா (என்ன)

3) செல்வ மாரன் என்னைவந்து தேனூற
வில் மறந்து லகினில் வருமெந்தன்
... ...
... ...
திருமா மறைதேடு உலாச
ஒருதவமுனி யுடையில் வாச
பருவ யிசை பாடவல்லீச
அரிதாகிய ஆடவல்லீச

தல்லாங் கிடதக கிடதரி கிடகிட
தாதிக்க தோதிக்க தக்கதின்ன தகதிரா (என்ன)

பேரளம் சம்புநாதர் மீது பதம்

பதம்-2

இராகம்: **பூர்விகல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

சருகுதேரகம் சம்புநாதரைச்
சமயத்தில் வரக் காணேன். (சருகுதே)

அனுபல்லவி

பரிமளம் வீசிய பேரளநாதரை
வங்கணம் கூட்டிக்கொண்டு இங்கிதஞ் செய்ய
(சருகுதே)

சரணங்கள்

1) சந்திரன் தழல் வீசுதே-உய்ய
சரீரமெல்லாம் மெத்த நோகுதே-அய்ய
இந்த இரவினில் மன்மதன் எய்யச்
சிந்தை கலங்குதே யானென்ன செய்ய
(சருகுதே)

2) மன்மதன் ஏனோ என்மீதில்-வாது
மனது தரிக்குதில்லை மையல் இப்போது
உன் மோகம் கொண்டேன் தரிக்கப் போகாது
எதுதான் இத்தனை அட்டியாகாது (சருகுதே)

3) உன்னாசை கொண்டேன் உள்ளமே-வாடி
உருகுதே ஆசை மோகமே கூடி
பெண்ணாசை கொண்டேன் மனதில் நாடி
பேரள நாதரைக் காணாமல் தேடி (சருகுதே)

ராசை கைலாசநாதர் பேரில் பதங்கள்

பதம்-3

இராகம்: **காபி** தாளம்: **ஆதி**

பல்லவி

[1]வாராய் சாகேந்திரா நின்போலே-வாசு
தேவகவி மீதினில் பக்ஷம் வைத்தது போலே
(வாராய்)

அனுபல்லவி

கருணை செய்து மருவானோ
முன்போல் என்மீதிலே (வாராய்)

சரணங்கள்

1) மையல் பெருகப் போமோ மதிமானே-அவர்
மாரீசகார ரென்றும் அறியேனே
கையில் நெல்லிக் கனிபோலே இருந்தேனே-ராசைக்
கைலாச நாதருடன் தினந்தானே (வாராய்)

2) இந்த வேலையிலோடி வாராரோ-நான்
இருந்த தனிமை யெல்லாம் பாராரோ
சிந்தை மகிழ்ந்து என்னைச் சேராரோ-அவர்
தந்தாசை தீர முத்தந் தாராரோ. (வாராய்)

1. வேறுபதத்தின் பல்லவியே இங்கு (சுவடியில்) காணப்படுகிறது.

பதம் - 4

இராகம்: பிலஹரி தாளம்: ஆதி

பல்லவி

அருமை அறிவார் ஒருவரையும் காணேன் - இதை
யாருடன் உரை செய்வேன் - இனி நானே. (அருமை)

அனுபல்லவி

மாரன் தானுமினி வருவானே வந்து
சதகோடி பாணங்களை விடுவானே - என் (அருமை)

சரணங்கள்

என்னாசை என்மனதில் அடங்காதே - மனம்
என்ன சொன்னாலுமினிக் கேளாதே
கன்னிமாரோசமினிப் பொருந்தாதே - ராசை
கைலாசநாதருடன் தினந்தானே. (அருமை)

மணக்குறிச்சி மேவிய அங்கயற்கண்ணிமீது பதம்

பதம் - 5

இராகம்: பாகேஸ்ரீ தாளம்: ஆதி

பல்லவி

தேவி! உன் பாதம் நம்பினேன் - அனுதினம் (தேவி)

அனுபல்லவி

தேவி சுகந்தமலர் வாவிய **மணக்குறிச்சி**
மேவிய சொக்கர் பங்கிலு லாவிய **அங்கயற்கண்ணி** (தேவி)

உ

சரணங்கள்

1) மன்னுமுன் கிருபைதான் கஞ்சம்-
(கஞ்சத்தில்விழும்)[1]
வண்டுநேராமென் நெஞ்சம்
என்னையாளாது கொஞ்சம்
சன்னியமிர்த பிஞ்சம்
உன்னையல்லால் பிரபஞ்சம்
பின்னை வேறுண்டோ தஞ்சம். (தேவி)

2) சந்திர வம்ச குலதீபம்-(தீப விலாசம்)
தரித்திராந்தகார சாபம்
உந்தனருள் பிரதாபம்
தந்ததே ஆற்றும் லாபம்
எந்திர தந்திர சொரூப
மந்திர சொரூபாரூபம் (தேவி)

3) திக்கு விஜய மீட்சி-(அருள் வீட்சி)[2]
செகத்ரட்சகி கடாட்சி
சாரதேஸ்வரி மீனாட்சி
விக்ரமலோக சாட்சி
மிக்க வேதாந்த சூட்சி
சொக்கர் பங்கில் மீனாட்சி (தேவி)

திருவல்லையூர் சண்முகர்மீது பதங்கள்

பதம்-6

இராகம்: சகானா தாளம்: ஆதி

பல்லவி

பேராசை தீரானோ! பிரணேசன் வாரானோ!
சீராரும் செங்கனிவாய்த் தேனூறல் தாரானோ! (பேராசை)

---

1. திரும்பப் பாடும்போது சேர்த்துக்கொள்க.
2. இந்த சொல்லைக்கொண்டு அடியைத் திருப்பவும்.

அனுபல்லவி

வாரான் குவிமுலையில்
சேரான் இங்கிதந்
தாரான் என்முகம்
பாரான் திருவல்லை
யூரான் சண்முகன் (பேராசை)

சரணங்கள்

1) சிந்தை உருகுதே
தேகம் மெலியுதே
இந்து நிலவும் வந்துதே
என்மீதில் காயுதே
விந்தை மேலாகுதே
விழியுந் துயிலாதே
ஐந்துகணை மதனன்
வந்து முடுகிய, பின்
வந்து முன்னும் வர
தந்திடும் மாலே (பேராசை)

2) கங்குல் வருகுதே
கலவி மயங்குதே
இங்கே மதக்குயில்
இப்போதழைக்குதே
மங்கை மாரேசுதே
மார்முலை நோகுதே
குங்கும முலையாள்
இங்கித நகையார்
செங்கையினாற் செய்த
அங்கச லீலை (பேராசை)

3) நல்லுற வாகியே
நயலிலை நாடியே
முல்லை மலரணைமேல்
முத்து முத்தாடியே

சல்லாபந் தேடியே
சய்யோகங் கூடியே
சொல்லிசை நேரிழை
வல்லி சதாசிவ
மெல்லியலர் திரு
வல்லையில் வேலர் (பேராசை)

பதம் 7

இராகம்: **பைரவி** தாளம்: சாபு

பல்லவி

காதலால் மனம் காயுதே - கன்னியென்னாசை (காதல்)

அனுபல்லவி

தீதழல் செவி பாயுதே சண்முக வேலவர்க்கு
ஆதரவாக வாயுதே. (காதல்)

சரணங்கள்[1]

1) காதலானரர் என்னைப்போல் ஆவலாயிந்தக்
காசியினியில் கண்டதுண்டோ மெல்லியே
சொல்லாய்த்
தோதகமே செய்தாரெந்தன் மீதிலுறவாயினிச்
சொல்வதேது அவன்நீதி? தோகையே கேளாய்
(காதல்)

தென்பழசை வேலர் மீது பதம்

பதம் - 8

இராகம்: **தோடி** தாளம்: கண்டசாபு

பல்லவி

என்ன செய்வே னோடி ?
இதுக்கு நான் ஆளோடி?-மின்னே! (என்ன)

1. மற்ற இரண்டு சரணங்கள் சுவடியில் இல்லை.

அநுபல்லவி

மின்னே! பழனை வேலர்
விரகம் பொல்லாதோடி? (என்ன)

சரணங்கள்

1) மாரன் கணையெய்ய; மதி தழல் பெய்ய
சேராத மடவார் தினந்தோறும் வெய்ய
பாரென் முகத்தை பாவிநான் என்செய்ய

மத்திம காலம்

கோடி வயதிலே மோடிபிச்சை
தேடி இரவெல்லாம் வாடுதே மனது (என்ன)

2) ஆவியும் நோகுதே ஆகமும் வேகுதே
பாவையரால் சண்டை பாரத மாகுதே
மா வளை சோருதே மாங்குயில் கூவுதே

மத்திம காலம்

சிந்தை உருகுதே நைந்துசிவசிவ
தொந்த மயலி விளைத்திள மானே (என்ன)

3) வானோர் பணிகுவர் வள்ளிமணவாளன்
கார்க் குழலாள்சிவ காமிதரு பாலன்
தேனார் மொழிசீலன் தென்பழனை வேலன்

மத்திம காலம்

சித்தமுருகியே மெத்தமலரணையில்
நித்த மருவிய முத்தமிட்டாட (என்ன)

ஆரூர் சிங்காரவேலர் மீது பதம்

பதம்-9

இராகம்: **ஷண்முகப்பிரியா** தாளம்: கண்டசாபு

பல்லவி

மின்னே! இந்நேர மென்னடி ?
அவருக்கங்கே (மின்னே)

அனுபல்லவி

தென்னாரூர் தனில் வாழும்
சிங்கார வேலர்க் கங்கே (மின்னே)

சரணங்கள்

1) சையோகம் அங்கு என்று குறித்தாரே-அவர்
மையல் கொண்ட என்னைப் பிரிந்தாரே-அவர்மீதில்
எய்யும் மதனன் வில்லைப் பறித்தாரே-அங்கே
மையல் கொண்டு மாதர் வழியை மறித்தாரே
(மின்னே)

2) ஆதித்தன் அத்தமனம் ஆம்போதென்னை நாடி
காதல் மயில் வாகனம் மீது பவனியாக
வீதியில் வருவார்க்கு ஏது ஆவடத்திலே
பாதி இரவாயும் என்ன சோதனையோ! தெரியாது
(மின்னே)

நிறையூர் வடிவழக நம்பிமீது பதம்

பதம்-10

இராகம்: **கல்யாணி** தாளம்: ஆதி

பல்லவி

கனராசகாரியமிது காணவசமோ-சுகந்த (கனராச)

அனுபல்லவி

வனவாச நிறையூரில் வடிவழக நம்பி ! (கனராச)

சரணங்கள்

1) கல்யாண தேசம் கலிங்கதேசம்-தலை
மெல்லிய மாயா புரியை வெளியாக்கியே
வல்லாள புரத்தரசர் வந்துகைப் பிடியாகச்
சல்லாபத்துடன் வந்து சந்திரகிரி கொண்டார்
(கனராச)

2) ஆதிவேலூர் கலங்க அளகாபுரம் தொலைய
வீதி தோரு லாடபுரம் விருந்து விடவே
கீதமிகக் காந்தார தேச முறையிட்டலற
மாதுபல்லவ தேசம் வளந்தூரல் கொள்ள (கனராச)

3) அத்தினாபுரம் வளைந்த அங்கதேசாதிபதி
சுத்த விசயாபுரமும் சுரங்கம் நடத்தி
வெற்றி விசயம்கொண்ட லோக பட்டாபிஷேகம்
தந்த வஞ்சி மணவாள! வடிவழக நம்பி (கனசார)

வருதை சேனாதிபன்மீது பதம்

பதம்-11

இராகம்: **சகானா** தாளம்: ஆதி

பல்லவி

எந்தன் விரக வெள்ளம் தானே-மானே !
எதற்குரை செய்குவேன்-நானே (எந்தன்)

அனுபல்லவி

சந்திரவதனன் சத்ரபதி மானே
எந்தனைமோடி செய்த போதே ! (எந்தன்)

சரணங்கள்

1) கும்பமுலையோ தன பாரம் - மானே
குளுருமுத்து சுடுது இந்நேரம்
சம்போக லீலையோ அயக்கூரம் - மானே
சகியே பெண்ணரசே எந்நேரம் (எந்தன்)

2) மல்லிகை முல்லை மலர்சூடி
வசந்த கோகிலமெனப்பாடி
மெல்லியரதி யுடனே யாடி
மகேந்திர போகமே தினமும் நாடி (எந்தன்)

3) சரஸ சல்லாப ரதி மார்பன் - நல்ல
தைரியன் அசனனாயினான் குமாரன்
வருசேர் சுனகனாயினான் சுதன்
வருதை மேவும் சேனாதிபன் மீதே
(எந்தன்)

ராசை முத்துவீரர் மீதும் பாதம்

பதம் - 12

இராகம்: **ஆகிரி** தாளம்: சாபு

பல்லவி

ஆசை மிஞ்சுதேதோ - ஐயா !
என்மேல் வாதோ (ஆசை)

அனுபல்லவி

1) **ராசை வாழ் முத்து வீரேந்திரா !**
நகைமுக சந்திரா ! (ஆசை)

2) நேரம் பெருகுதே நிலவும் வருகுதே
பூசல் வளருதே போகந் தளருதே. (ஆசை)

3) மாலை நேரத்தில் பையச் சந்த்ரோதயமும் வந்து
செந்தழல் தன்னைப் பெய்யச் சரங்கள் கோடி
(ஆசை)

3) ஆலைவில் வேறு, தினமும் எய்ய நானுமிப்படி
ஆனை யுண்ட கனிபோலே ஆனேன் என்ன செய்ய
(ஆசை)

தளவாய் நரசேந்திரன் மீது பதம்

பதம் - 13

இராகம்: **ஆரபி** தாளம்: **ஆதி**

பல்லவி

வாசலில் வாரானோ! வாய்முத்தந் தாரானோ!
ராசன் தயவாய் நரசேந்த்ரனெனைப் பாரானோ! (வாசலில்)

அனுபல்லவி

ஆசை வளருதே ஆவிதளருதே
பேசுவார்களெதிர் வாசனை பல்லக்கில் (வாசலில்)

சரணங்கள்

1) மனது பதறுதே வளைகள் சிதறுதே
கனிவாய் சருங்குயில்கள் கூகூவெனக் கதறுதே
பனிநீர் தெளிக்கவே பரிவாய்ச் சுகிக்கவே

மத்திம காலம்

அனகன் வாளி அஞ்ச மனசு லீலை மிஞ்ச
கனிவாய்த் தேனுறுஞ்ச கனக பல்லக்கில் (வாசலில்)

2) முத்து முத்தாடவே மோகப் பதம் பாடக்
கொத்தலர்கள் கூடிக் கொஞ்சிக் கொஞ்சிக் கூடவே
மெத்த மன தேகமாய் மெத்தவொரு த்ரேகமாய்

மத்திம காலம்

மெத்த மீதில்மன மொத்து மேவிசெய்ய
மெத்த மேவுமத மத்த கசத்தில் (வாசலில்)

3) நாயக ரத்தினம்போல் ஆயர் பரகொங்கை மேல்
ஏயர் மத சாதி யேபெருகு மரபினால்
காயர் சாதியென்னக் கலந்து கலவி பண்ண

மத்திம காலம்

தூய பாலனென பாயவே மதன
ராய ராயதள வாய்நர சேந்த்ரன் (வாசலில்)

ஸ்ரீநிவாஸ செண்டலங்காரன் மீது பதம்

பதம் - 14

இராகம்: கரூட்டி தாளம்: ஆதி

பல்லவி

வரவர என் மையல் பெருகி வளர்ந்தது
மானே நான் என்ன செய்வேனோடி? (வரவர)

அனுபல்லவி

ஸ்ரீநிவாஸ செண்டலங்காரன்
நம்பி அன்பாய் என்னை
சேர்ந்தணைந்த சுகந்தனை நினைந்து (வரவர)

சரணங்கள்

1) என்னசெய்வேன் மதனன்கணைவந்து படப்பட
இப்படியே எந்தன் மனம் நோமோ
தஞ்சம் எனவே உன்னை நம்பினேன்-என்துயர்
சகியே! உரைத்தழைத்து ஓடி வாடி (வரவர)

2) மருமலரணை மீதில் இருவரு மொருமையாய்
மருவி யணைந்த சுகந்தனை நினைந்து
பருதி னெவே வானில் வருமதியினால்-மெத்த
உருகி உருகி உள்ளம் உணரடி தோழி(வரவர)

3) நால்வேத சாகரன் ராசராஜகோபாலன்
நல்கிய குமாரன் கம்பீரதீரன்
மேன்பெருஞ் செண்டலங்காரன்-என்னை
மேவியணைந்த சுகந்தனை நினைந்து(வரவர)

மன்னன் சகஜி மீது பதங்கள்

பதம்-15

இராகம்: **சங்கராபரணம்** தாளம்: கண்டசாபு

பல்லவி

இங்கே வருவானேன் என்னை
அங்கே வரச்சொன்னால் வாரேனோ மெத்த
வங்கணமாய் வந்து மருவேனோ;
(இங்கே)

அனுபல்லவி

இங்கே வருவானேன் ஏகோஜீந்த்ரனருள்
சங்கீத லோல ஸ்ரீ சாகேந்திரனே!
(இங்கே)

சரணங்கள்

1) மாரன் கேலிசெய்ய வருவீர்-வருவீரென்று
வாரி ஜாட்சி அங்கே வழிபார்க்க
யாரு மறியாமல் அர்த்த ராத்திரி அந்த -
காரமும் பாராமல் காதலுடன் (இங்கே)

2) முடிப் பன்னூறு பொன்னும் முத்துமாலையும்
கையில்
எடுத்துக்கொண்டிங்கே என்னருகில்
அடிக்கடி நீர்வந்தால் அபசாரம் இல்லாவே
கொடுத்தால் நானேவந்து கூடேனோ (இங்கே)

3) ஏக சத்ராதிப ஏகவீரா! நித்தியம்
த்யாக கர்ண! போக! தேவேந்திரனே!
ஏக போகமாக என்னைச்சேரும் வாரும்
வாகனே! ஸ்ரீசாக மகராஜனே ! (இங்கே)

பதம் - 16

இராகம்: **சிந்துபைரவி** தாளம்: **ஆதி**

பல்லவி

என்ன செய்வேன் இந்த மோடி
எந்தன் மீதில் ஏனடி மின்னே ? (என்ன)

அனுபல்லவி

கன்னியே உன்னைப் பிரிந்தால்
கணமெனக் கோருக மாகுது. (என்ன)

சரணங்கள்

1) நவமோகினி யான் தொடரத் தொடர
நடக்குறாய் உந்தன் மனது கல்லோடி ?
பவழவாய் இதழ்த்தேனே! ஒருபணத்துக்கொரு
பணிவிடையோ சொல்லடி ? (என்ன)

2) மலரைத் தேடிய வண்டு போலுன்னை
வனிதையான் வலிய வேண்டினால்
முலையின் மேல் என்னைச் சேர்த்தணைத்தொரு
முத்தம் தாராமல் இப்படியானால் (என்ன)

3) வாசுதேவன் கவிதையால் மிக மனம் மகிழும்
சோமேந்திரனே! சாமி போசலகுலதிலக!
சாஹஜி பூப! வாவென்று
முன்போல் சேராமல் (என்ன)

பதம் 17

இராகம்: பரசு   தாளம்: ஆதி

பல்லவி

இத்தனை மோடி ஏது ?
என்மே லிப்போது (இத்தனை)

அநுபல்லவி

சத்துரு சம்ஹார தீர
சகஜி ராஜ கம்பீர (இத்தனை)

சரணங்கள்

1) ஐயா இப்படி ரோசம்
ஆனால் என்ன உல்லாசம்?
மையல் கொள்வதே மோசம்
மன்னர்க்குண்டோ நேசம்? (இத்தனை)

2) என்னிளமை வீணே போமோ?
எவர்க்கும் பெண்ஜன்ம மாமோ?
கன்னியர் ஏச லாமோ?
காதல் பொறுக்கப் போமோ? (இத்தனை)

3) அருள்வாசு தேவன் மேலே!
அன்புவைத் தொருநாள் போலே!
வரிசை செய்து மேன்மேலே!
வளர் சாகேந்திர! என் மேலே! (இத்தனை

பதம் - 18

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

அகத்தில் புருஷன் என்றால் மனதுக்கு
ஆகாது என்ன செய்வேன்? தோழி (அகத்தில்)

அனுபல்லவி

செகத்திலுள்ளோர் புகழ் சகஜி மகாராசன்
சிங்காரலீலை ஒருநாள் கண்டபின்பு (அகத்தில்)

சரணங்கள்

1) ஆனைபோற் கண்டவர் பூனைபோற் பார்ப்பாரோ
அணிமுல்லை கண்டவர் அல்லிப்பூ அணிவாரோ
தேனையருந்திய நா வெல்லம் தேடுமோ ?

மத்திம காலம்

வானில் ரவியைக் கண்டலருங் கமலம்
வஞ்சியே மின்மினியைக் கண்டலருமோ ?
தானே சந்திரனைக் கண்டுருகும் காந்தக்கல்
சந்திரசோதியை மண்டுருகுமோ ? (அகத்தில்)

2) சிந்தை கனவிலும் அவனை நாடுது
செங்கை அவனைத் தழுவவே தேடுது
சுந்துகக் கொங்கை கச்சிலடங்காது

மத்திம காலம்

செந்தமிழ் அவன்மேல் படித்தாலெனது
செவ்விதழில் தேன் அருவி யூறுது
எந்தனுக்கிசைந்த நாதனவனல்லால்
இந்துமுகி ! என்ன சொன்னாலுமிந்த (அகத்தில்)

3) அனுதினம் வாசுதேவன் கவிதை என்றால்
ஆதரிக்கும் போசலான்வய சேகரன்
கனகவிபூஷணம் வாரணம் சிவிகை

மத்திம காலம்

கவிஞர்க்கருள் கர்ணன் தளபதி எனவே
சாமந்தராசர்கள் சந்ததம் போற்றிய
சகஜி மகாராசன் மனதொருமித்துக்
கலந்தென்னை யணைந்த மன்மத லீலையால்
(அகத்தில்)

பதம் - 19

இராகம்: **பீம்ளாஸ்** தாளம்: **ஆதி**

பல்லவி

உனக்கு இப்போது யான் சொல்லும்
உபசாரமேது ? (உனக்கு)

அனுபல்லவி

அனகன் சாக ராஜனை
அழைத்து வந்து கூட்டின (உனக்கு)

சரணங்கள்

1) இரவும் நூறுயுகமாகி இருவிழி உறங்காமல்
கரிராஜன் அருந்திய கபித்தம் போலே யாள்
விரகவேதனை யாலே மெலியும் வேளையில் எந்தன்
பருவம் அவம் போகாமல் பக்ஷம் வைத்து ரக்ஷித்து
(உனக்கு)

2) ஏணாக்ஷி எள்ளளவும் இரக்கமில்லாமல் பஞ்ச
பாணன் எய்யும் கணைக்குப் பரிகாரம் எங்கும்
காணாமல் யான் மெலியும் காலையினில் நீ செய்த
பிராணோபகாரத்துக்கு பிரத்யுபகாரம் உண்டோ?
(உனக்கு)

3) அந்த மாதுடன் கூடி அணைந்த சகராஜனை
சந்ததம் வாசுதேவன் தமிழினால் துதித்து,
எந்தவிதமோபேசி இணங்கி இங்கே அழைத்துவந்து
எந்தனுடன் மருவவே கிருபை செய்த. (உனக்கு)

பதம் - 20

இராகம்: **சுபபந்துவராளி** தாளம்: **ஆதி**

பல்லவி

மையலே கொண்டேன் தையலே - மதி
பெய்வதெல்லா மெனக்கு வெய்யலே[1] (மையலே)

அனுபல்லவி

அய்யய்யோ காமப் பையலே - ஏராளம்
எய்யுறான் வாளி மெய்யிலே. (மையலே)

சரணங்கள்

1) ஆசை யென்ன பரி யாசமோ? - தூது
பேச உனக்கு ப்ர யாசமோ?;
நேசம் அவள் வீட்டில் வாசமோ? - சாக
ராசன் தனக் கென்மேல் ரோசமோ? (மையலே)

2) மந்த மாருதமும் வந்துதே - மலர்ப்
பந்துமுலை விம்மி கந்துதே;
எந்தன் மோகம்மி குந்துதே - அவன்
விந்தை கண்டு மனம் நொந்துதே. (மையலே)

3) தாவி அணைத்து றவாடவே - வாசு
தேவன் கவிதைகள் பாடவே;
பாவையே நான்முத் தாடவே - சாக
ராசன் என்னை யின்று கூடவே. (மையலே)

---

1. பெய்யுதிரவெல்லாம் வெய்யிலே-என்பது மூல பாடம்.

பதம் 21

இராகம்: **சாரங்கா** தாளம்: **ஆதி**

பல்லவி

சாகேந்திரன் வாரானோ
தயவுடன் பாரானோ? (சாகே)

அனுபல்லவி

வகையா யென்னைக் கூடி
மனது களி கூரானோ ?

சரணங்கள்

1) மதியனல் தாருதே வாடையோ வீசுதே
மதியாமல் குயிலென்னை வசைபேசிக் கூவுதே
இதிகை[1] தாவியே இடை தவமானதே

மத்திம காலம்

இதயம் நொந்ததே இதையறிந்ததே
உதவி செய்தபேர்க் கதிசயஞ் சொன்னேன் (சாகே)

2) எவரை அனுப்புவேன்? ஏதென்று சொல்லுவேன்?
பவமதனன் மாரப் பயலுக்கென்ன சொல்லுவேன்
நவமதாகிய என் கவிதை பாடியே
தவன மேவியென் கவலை தணியுமோ?

மத்திம காலம்

……… …. … … … … மின்னாள் மாரன்
துயிலாக் கண்ணுபகாரன் … … … … (சாகே)

---

1. இதிகை - பரம்பரையாக வந்த உபதேசம்.

3) தேசாதிராசர் துதிசெய்யும் பணிபாதன்
மாசிலாதவரிங்கே மகிழுங் குணசரீரன்
வாசுதேவன் மேல் நேசம் வைத்தருள்
போசன்1 தஞ்சைவாழீசன் கொண்டுபோய். (சாகே)

பதம் 22

இராகம்: **நாதநாமகிரியா** தாளம்: **ஆதி**

பல்லவி

மோடி ஏனையா? என்மேல்
மோடி ஏனையா? (மோடி)

அநுபல்லவி

மோடி யேனையா என்மேல்
மோகமானேன் சகஜி ராசேந்திர! (மோடி)

சரணங்கள்

1) அன்ன வசனங்கள்2 தடுத்து
ஆசையாய் மடலெடுத்து
உன்னைச் சதமென் றடுத்து
ஊரோம லானேன் விடுத்து (மோடி)

2) தந்த மயலோ பெரிதே
சகிக்கக் கூடா தரிதே
மந்த மாருதம் வருதே
மாரவேள் படைபொருதே (மோடி)

3) தீன சரண தாநேசா!
தியாகராசர் கிருபை யாளா! வீர!
மாநிலம் புகழுல்லாச!
மருவுஞ் சகசி ராச! (மோடி)

---

1. இதற்கு மத்திம காலம் சுவடியில் இல்லை.
2. வசனம்-ஆடை என்றும், பேசாமலிருந்து என்றும், பொருள் கொள்ளலாம்.

பதம் - 23

இராகம்: **வசந்தா** தாளம்: ***ஆதி***

பல்லவி

இப்படிச் சொன்னால் கூடாதென்று
எப்படிச் சொல்வேன்? (இப்படி)

அனுபல்லவி

அற்புத மன்மத ரூபன்
அளகைவாழ் சாகபூபன்

சரணங்கள்

1) அனுதினம் என்னருகில்
அந்திநேரம் வந்து வந்து
உனது சித்தம் என் பாக்கியம்
உன்மேல் ஆசை மிஞ்சுதென்று (இப்படி)

2) வஞ்சியே! கேள் இக்கணமே
மனதிரங் காதிருந்தால்
பஞ்சபாணன் என்னைச் செய்யும்
பழியுன்மேல் சுமக்குமென்று (இப்படி)

3) கருணையால் வாசுதேவன்
கவியுகந்த சாகேந்திரன்
இருகையாலும் சலாம் செய்து
என்னைமுன்போல் மருவுமென்று(இப்படி)

பதம் - 24

இராகம்: **நாரகி** தாளம்: ***ஆதி***

பல்லவி

ரதி ஸமயத்திலிந்த ராஜஸம் ஆமோடி?
மதிவதனன் சகஜி மகிபாலன் உன்னைச்சேர்ந்தால் (ரதி)

அனுபல்லவி

சருவிமேல் வகைகொண்ட தசமளித்து நீயாய்த்
துயில் நெறி விடுத்து ரதிகள் தொடுத்து மேவாய் (ரதி)

சரணங்கள்

1) இன்று ஸுதினம் இருவர்க்கு மென்றுகூட
நீ மருவாமல் துரைமகள் போலிப்படி (ரதி)

2) வலியக்கையாலணைத்து வர்மமாய் மஞ்சமடுத்து
முலையில் சேர்த்து நெறித்து முகத்தோடு
முகம்வைத்து (ரதி)

3) வரிசை தானங்கள் பாடி
வணங்கிப் பாதம் வருடி
ஒருவர்க் கொருவர் கொண்டாடி
ஒருமித்து விளையாடி (ரதி)

4) இன்ப மடவார் மனோசன்
பாகசாசன சமானன்
பாவலர் மகிழும் போசன் தினமும்
வாசுதேவன் புகழ்ச் சோழேசன் (ரதி)

பதம் 25

இராகம்: **கல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

மோடி உனக்கென்னடி
வாடா மதிமுகமானே - கேள் (மோடி)

அனுபல்லவி

மோடி உனக்கென்னடி முத்துமோகினி-உன்னை
நாடி வந்த சாக ராசனுடன் (மோடி)

சரணங்கள்

1) பணமென்னடி பெண்ணே பாஷாணம் அவனுடைய
குணமே நமக்கொரு கோடியன்றோ ?
மணமும் மலரும் போலே வலியவந்துனை அவன்
இணங்கினால் அது மெத்த எண்ணிக்கை காண்
(மோடி)

2) ஆடப்போன தீர்த்தம் அருகில் வந்தாற் போலே
தேடியபொருள் கையில் சிக்கினாப் போலே
கோடித்துகிலிரண்டு கொண்டுன் வளவில்1 வந்தால்
ஓடி அழைத்துவர வோடாமல் இருக்கும். (மோடி)

3) இந்திரனெனவரும் ஏகோஜி மகாராஜன்
மைந்தனான சாக மகிபாலன்
அந்தமாக முன்போல் அணைந்தாலதுவே போதும்
பைந்தொடி நீ செய்த பாக்கியம் காண். (மோடி)

பதம் - 26

இராகம்: **மோகனம்** தாளம்: **ஆதி**

பல்லவி

மையல் கொண்டாலும் இப்படி
மனதை மிஞ்சலாமோடி (மையல்)

அனுபல்லவி

தையலார் மோகனன்
தஞ்சை சகஜி ராசனை நாடி (மையல்)

சரணங்கள்

1) மத்தகஜமும் மாவுத்தன்
வார்த்தைக் கடங்குதல் போலே
தத்தையே மோகம் மெத்தவானாலும்
சித்தந் தன்னில் நிறுத்தவேணும் (மையல்)

2) தோகையே கேளடி சொல்ல
சுக விரோதி நானல்ல - ஏசு
போகானு ராக மாகிலும்
லோக மறிய லாகு மோடி. (மையல்)

1. வளவு - வீடு

3) வாசுதேவன் கவியிலே மகிழ்
சாகேந்திரன் மீதிலே ஆசை
கொண்டாலும் பூசலே மாதர்கள்
ஏசுவாரென்ற ரோசமே வேணும்

பதம் - 27

இராகம்: **காபி** தாளம்: **ஆதி**

பல்லவி

தருணி! அவன் மீதில் மோடி
சந்ததம் ஆமோடி (தருணி)

அனுபல்லவி

தெரியச் சொன்னால் எந்தன் வார்த்தை
தேனே கேளாயடி மானே (தருணி)

சரணங்கள்

1) மருவலர் பணியும் சகஜி மகிபன்
உன்னைத் தேடி வந்ததே உந்தன் பாக்யம்
சொன்ன வார்த்தை உத்தாரந்தான் சொல்லாய்
மவுனமேது
சுரதவிதங்களுக்கு ஏற்ற பருவங்காண் இப்போது
(தருணி)

2) காசுபணம் எண்ணாமலே கலந்தபேரனேகம்
காதல் கொண்டவனைத்தேடுங் கன்னியர் அநேகம்
போசனிவன் என்றவனைப் புகழுமிந்த லோகம்
புவியில் பெண் பிறந்தால் பொருந்துவதே யோகம்
(தருணி)

3) அளகை ஏக மகிபாலன் அருளன் குணசீலன்
அனுதினம் வாசுதேவன்மேல் அன்பாம் அனுகூலன்
வளமையாய் முன் என்னைச் சேர்ந்த வரிசை
மதனலீலன்
வந்ததே போதும் சகஜி மகிபாலன் வில்வேலன்.
(தருணி)

பதம் - 28

இராகம்: **சிந்துபைரவி** தாளம்: திச்ரநடை

பல்லவி

என்ன மாய மோகம் கொண்டாய்
இளந்தையே! நீ வீணே! (என்ன)

அனுபல்லவி

மன்னர் வணங்கும் சகஜி
மகாராஜன் மீதிலே (என்ன)

சரணங்கள்

1) வேலை நேத்திவகை கேள் என்றால்
வேண்டித் தந்த நகை கேட்கிறாய்?
மாலைக்கு முத்து கேள் என்றால்
வாய் முத்தம் நீ கேட்கிறாய் (என்ன)

2) சொன்ன மணிமாலை கேளென்றால்
தோளில் மாலை ஏன் கேட்கிறாய்
வன்ன வெழுத்தைக் கேளென்றால்
மன்மதக் கலையைக் கேட்கிறாய் (என்ன)

3) நரையாளும் சகஜி ராஜனைத்
தழுவிப் பதக்கம் கேளென்றால்
பரிவாய் வாசுதேவகவி சொன்ன
பதக்கவிகளையே கேட்கிறாய் (என்ன)

பதம் - 29

இராகம்: **தோடி** தாளம்: ஆதி

பல்லவி

மானே! சாகேந்திரன் உன்னைவரச்சொன்னான்
(மானே)

அனுபல்லவி

ஆனாலும் இந்த மோடி
அனுதினம் ஆகாது (மானே)

சரணங்கள்

1) பாவையே குடுக்கச் சொன்னான்
பாரடி பொன்னோலை
தாவடத்துக் கான முத்து
தந்தான் சரிகைச் சேலை
ஓவியமே கேள் அவனுக்கு
உவமை எங்குமில்லை
மேவினால் தெரியும் அவன்
விவிதக் காமலீலை. (மானே)

2) மெத்த மையல் கொண்டு
தூதுவிடும் பெண்கள் கோடி
இத்தலத்தைக் கண்டு
மடலெழுதும் பெண்கள் கோடி
தத்தையே அவனைக் கூடத்
தவம் செய்வோர் கோடி
மத்தொருவர் போலெண்ணாதே
வரச்சொன்னால் நீ வாடி (மானே)

3) நவரஸாலங்காரகாவ்ய
ரசிகன், வைரி பீமன்
யவன துரங்க நகுலன்
ஜனரஞ்சன சோமன்
கவி வாசுதேவன் புகழும்
கன குணாபிராமன்
ரவி வம்ச சேகரன் சகஜி
ராஜ சார்வ பௌமன் (மானே)

பதம் 30

இராகம்: **ஆரபி** தாளம்: **ஆதி**

பல்லவி

அபரஞ்சி யென்றொரு மாதாம் - மெத்த
ஆசை உமக்கு அவள் மீதாம் (அபரஞ்சி)

அனுபல்லவி

விவரமாய் சொல்லும் ஒளியாமல் இப்போது
வீராதிவீரனே! சாஹ ராஜேந்திரனே. (அபரஞ்சி)

சரணங்கள்

1) ஆயிரம் பொன் குறையாமல் கேட்டாளாம்
அரைக்காசு பட்ட பணமும் கூட்டாளம்
சாயப் புடவையல்லாது கட்டாளாம்
தானே உமக்கவள் தூது விட்டாளாம் (அபராஞ்சி)

2) திருவாரூர் கீழத்தெருவில் வளவாம்[1]
தேவரீர்க்கவள் மெத்த உளவாம்
தருணி முலை இரண்டும் மேரு வளவாம்
சாமி நீர் மருவி வந்ததும் களவாம் (அபரஞ்சி)

3) ஏக மகீபாலன் பாக்ய குமார!
இயல் வாசுதேவன் துதிக்கும் ஒய்யார!
த்யாகராஜர் பதம் தொழும் தீர!
ஸ்ரீசாக ராஜேந்திர கருண கம்பீர!! (அபரஞ்சி)

---

1. வளவு - மனை, வீடு.

பதம் - 31

இராகம்: **கானடா** தாளம்: **ஆதி**

பல்லவி

அறிவேன் எனக்கு ஒருத்தி சொன்னாள் சாமி
ஆரையா சொல்லும் அந்த மின்னாள் ? (அறிவேன்)

அனுபல்லவி

பிரியேன் என்றென்னுடன் முன்னாள் சொன்ன
பேச்செல்லாம் மறந்தீர் நீரிந்நாளிது

மத்திம காலம்

குறியேன் நான் சிறியேன் - சொல்
லறியேன் கவடுன்னைப் போல்
மறையோர் நிறை யளகைக்
கிறைவ சகஜி ராஜி ! (அறிவேன்)

சரணங்கள்

சாலநிறை கமழும் சோலை தன்னில்
சந்திரன் உதித்து வரும் காலை
அந்த ஆலை மொழியாள் அனுகூலை - என்று
அனுபவித்து வருடி லீலை - முத்து

மத்திம காலம்

மாலை நல் வேலை - யாம்
ஓலை பேர்ச் சேலை - ஓர்
வாலை கையில் நேற்று
மாலையில் அனுப்பினது (அறிவேன்)

2) கோதை யவள் பொது மாது தானோ?
குடிவழியோ? சொல்லிப்போது - அவள்
சாதிவசதி பெயரேது? சொல்லும்
சாமி என்னுடன் என்ன சூது ?

மத்திம காலம்

போதும் போதுமென் மீதில் நீதியோ
வாது நீரேதோ ஓதுநீர் வகைகள்
என்னத உன் ஜாலங்கள்★

பதம் - 32

இராகம்: **சிவரஞ்சினி** தாளம்: **ஆதி**

பல்லவி

மோகமறியாது போலே என்மேலே
மோடியேன் மானே! - முன்பின் (மோகம்)

அனுபல்லவி

மிஞ்சுதையோ மையல் என்செய்வேன் - நீ
பஞ்சணை மீதினில் இணையாய் (மோகம்)

சரணங்கள்

1) உத்தரம் ஒன்றை உரைத்திடில் அதனால்
முத்துதிராதடி மொழிவாய்
சித்தமிரங்கி இதழ்க்கனியாரமு -
தத்தினில் ஒருதுளி தருவாய் (மோகம்)

2) செந்தமிழ் வாசுதேவன் சவியே சொல்லும்
உந்தனை நாடுது என் மனமே
முந்தி யணைந்தது போல் அணைவாய் சகஜி-வ
சுந்தரனான அதிபதி நானே. (மோகம்)

★ சுவடியில் இப்பாடல் இதற்குமேல் இல்லை.

பதம் - 33

இராகம்: **தோடி** தாளம்: *கண்டசாபு*

பல்லவி

வாடி வாய்முத்தந் தாடி - என்மீதில்
மோடி இத்தனை ஏனடி. *(வாடி)*

அனுபல்லவி

1) தோடி முகாரிகள் பாடி வினோதமாய்க்
கூடி முன்போல் விளையாடி முத்தாடவே. *(வாடி)*

2) பந்து நிகர்த்த தனந்தனில் சந்த-சு
கந்த பணிந்து மகிழ்ந்து கலந்தனை *(வாடி)*

3) இந்த வசந்த தினந்தனில் அந்தம
தந்தனு சிந்தலர் வந்திட நொந்தனன் *(வாடி)*

4) கைக்குள் நெருக்கி வருக்கை சருக்கரை
மிக்க முருக்கிதழ் இக்கண மேதர *(வாடி)*

5) உத்ததுரைத்தலர் மெத்தையில் வைத்தொரு
முத்து நகைத்தெனை நித்தம் அணைத்திட *(வாடி)*

6) வாசுதேவன் சொல்லும் ஆகவினால் மகிழ்சகஜி
வசுந்தராதிபதி நானே. *(வாடி)*

பதம் - 34

இராகம்: **சாருகேசி** தாளம்: *ஆதி*

பல்லவி

உமக்கேத்த வகைக்காரி காண் - நாளும் *(உமக்கு)*

அனுபல்லவி

நமதகில பூதரணி நாத ! சகஜீந்த்ர (உமக்கு)

சரணங்கள்

1) தென்காஞ்சி இவள் ஜனன தேசம் - ஜயதி
தந்த ஜாலம் குந்த கோசம் - இப்போ
கொங்கணேஸ்வரன் தெருவில் வாசம் - நைவ
குவலயே லாவண்யம் க்வாபிதத் ஸத்ருசம் (உமக்கு

2) இப கும்பம் இவள் தனத்துக் கீடு-தீனிகி
ஈ ஜகதுலோ லேது ஜோடு - காதில்
அபரஞ்சியாலிழைத்த தோடு - காதில்
ஆகுல மைனதி ஓ அய்யலு! நாதோடு
(உமக்கு)

3) தினகர ஸஹஸ்ர ஸமதேஜ! - வாஸு
தேவகவி தினம் துதிக்கும் போஜ - நாளும்
அநேக, போஸல ஸிந்து ராஜ - கீர்த்தே
ஏகிமகீபனருள் சகஜி ராஜ. (உமக்கு)

பதம் - 35

இராகம்: **கரஹரப்ரியா** தாளம்: **ஆதி**

பல்லவி

உன்னைத் தேடிப் போனாள்
மின்னாள் நேற்றொருத்தி (உன்னை)

அனுபல்லவி

சன்னையாய் உன்விடுதி தன்னில் வந்து வந்து
(உன்னை)

சரணங்கள்

1) படுக்கை வீட்டில் வந்தங்கே பார்த்துன்னைக்
காணாமல்
திடுகிட்டாள் மலரணையிற் சேர்ந்தாள் -
பின்பொருந்தாள்
அடிக்கடி அடியோசை அதனால் வழிபார்த்துக்
கடின விரகத்தினால் காத்துக் கொண்டிருந்தது
(உன்னை)

2) பிராணேன் வந்தானென்று பரிகாசம் சகி செய்ய
நாணி மனம் மகிழ்ந்தாள் நகைத்தாள் பின்
திகைத்தாள்
காணாமல் உன்னை எண்ணிக் கடும் நெடுமூச்சுடன்
ஆணி மௌக்திக மாலை அடையாளமிதோ வைத்து
(உன்னை)

3) மருவலர் பணிஏக மகாராஜனருள் பால!
சரச வாசுதேவன் சாகித்ய லோல!
தருணி! மன்மதனான சகஜி ராஜேந்திர!
மருவி முன் உன்னைச் சேர்ந்த வனிதையோ
தெரியாது. (உன்னை)

பதம் - 36

இராகம்: **மோகனகல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

வரச்சொன்னேன் என்று சொல்-போடி மின்னே
(வரச்)

அனுபல்லவி

துரைசிங்கம் சாகேந்திர
சுவாமியை நான் (வரச்)

சரணங்கள்

1) பூவணை மீதினில் காமனும் ரதியும்
போலிருவரும் உறவாடி
ஆவியிரண்டும் ஓரகமுமாய்
விளையாட இந்நேரமே ஓடி. (வரச்)

2) ஓவியமே ! ரதிசுக பரவசத்தில் யான்
உரைத்தது மனத்தில் எண்ணாமல்
காவி மலர்க்கணை மாரன் எய்யாமுன்னம்
கால விளம்பம் பண்ணாமல் (வரச்)

3) தேனிலும் வாசுதேவன் மதுரம் பெறு
செந்தமிழே இனிக்குது என்றானை
வானவர் கோன்நிகர் சாகேந்திரனை
வணங்காத முகலரை வென்றானை (வரச்)

பதம் - 37

இராகம்: **சகானா** தாளம்: **ஆதி**

பல்லவி

இப்போவரச் சொல்லடி பிராணேசனை
இப்போவரச் சொல்லடி. (இப்போ)

அனுபல்லவி

அற்புத ரூபனான
சாகேந்திரனை இங்கே. (இப்போ)

சரணங்கள்

1) அந்த மதனன் சேனை தோற்க
எந்தன் உயிரைக் காக்க
எந்தன் வதனம் வேர்க்க
இணங்கி மையல் தீர்க்க
சுந்தரமுலை சேர்க்க
சுரத கேளிக்கை பார்க்க (இப்போ)

2) மல்லிகை சுகந்தங்கள் கூட
மதுர மாகவே இசை பாட
அல்லி லெந்தனைக் கூட
அமுத நிலைகள் நாட
வில்லியும் பயந் தோட
விசித்திரமாய் விளையாட (இப்போ)

3) சிங்கார மன்மத லீலனை
வாசுதேவ கவீந்த்ரானுகூலனை
மங்கையர் வேலனை
மருவார் பணி காலனை
ஸங்கீத லோலனை
ஸாஹபூ பாலனை

பதம் - 38

இராகம்: **சகரனா** தாளம்: **ஆதி**

பல்லவி

கும்பிட்டேன் என்று நீ சொல் - என்
சாமியை நான் (கும்)

அனுபல்லவி

1) ஸொம்புடன்[1] என்னைச் சேர்ந்த
ஸ்வாமி சாகேந்திரனை நான் (கும்)

1. ஸொம்பு-(தெலுங்கு மொழிச் சொல்) இதன் பொருள்: நிறை, மகிழ்ச்சி, சுகம், அழகு.

சரணங்கள்

1) அன்னமே! பெண்புத்தியால்
அறியாமலே நான்
என்ன குறை செய்தாலும்
ஏழை நானிரு கையாலும் (கும்)

2) மேட்டியாய்[1] அவருக்கென்மேல்
விசுவாச மிகுந்தாற் போதும்
சாஷ்டாங்கமாய் வணங்கித்
தையலே நான் நூறுதரம் (கும்)

3) செந்தமிழ் நிபுணனான
ஸ்ரீவாசுதேவ கவிமேல்
சந்ததம் கருணை செய்யும்
சாகபூபாலனை நான் (கும்)

பதம் - 39

இராகம்: **தோடி** தாளம்: **ஆதி**

பல்லவி

இந்நேரமே அழைத்தோடி வாடி
மின்னரசே நீ! என் மையல் சொல்லி (இந்நேர)

அனுபல்லவி

திரைசொல் வாசகன் ஆன துரைசிங்கம்
சாகேந்திரன் இங்கு வரச்சொன்னான் என்று -
நீசொல்லி (இந்நேர)

சரணங்கள்

1) இளவயதவள் திருவளரிடை மருதூரில்
வளவு பொற்றாமரையோரம் - அவள்
கொங்கைதனிலோரடை யாளமென்
நகக்குறிகள் பட்டிருக்கும். (இந்நேர)

---

1. மேட்டி - அதிபன், தகுதி.

2) கன்னனாம் அளகையின்
மன்ன னென்று எந்தன் - பேர்
சொன்ன வுடனே அவள்
ஓடி வருவாள் - அவளை (இந்நேர)

3) பைந்தொடி அவளிதழ்
அந்தம் வாசுதேவன்
செந்தமிழ் போல்
சிறந்து இருக்கும். (இந்நேர)

பதம் - 40

இராகம்: **சாருகேசி** தாளம்: **ஆதி**

பல்லவி

வாடி வாதென்னடி - அடி பெண்ணே! இந்த (வாடி)
மோடி என்னடி என்னை முன்பின்னறியாயோடி! (வாடி)

அனுபல்லவி

மெத்த நம்பினன் நானடி - மானே உன்னை
தத்தையே என்னிடம் பராமுகமேனடி
சித்தஜன் என்னைத்தேடி ஏவும் மலர்க்கணை கோடி
நித்தியம் எய்யுறாண்டி நிமிஷம் போதாதடி (வாடி)

சரணங்கள்

மலரணை தனிலிருந்து கோவையிதழ் அமுதம் தந்து
கலவியில் உவந்து கலைநிலைகள் அறிந்து
குலவியே என்னைச் சேர்ந்து கூடக்கிருபை நினைந்து
... ... (வாடி)

பதம் -41

இராகம்: **ஆகிரி** தாளம்: *சாபு*

பல்லவி

தூதுதான போன மாது
ஏது தாமத மறியேன் (தூது)

அனுபல்லவி

ஸ்ரீதரன் சாக ராசேந்திரன்
ஆதரவுடன் வாரானோ ? (தூது)

சரணங்கள்

1) கன்னியர் முலைமேல் நகச்
சின்னங் கண்டு கண்டிப்போ
வன்னிமுன் மெழுகு போலே
என்னுள்ளம் மெலிகுவேனோ ! (தூது)

2) ஆசை கொண்ட பேரில்லையோ !
காசினியில் என்னளவே
மாசிலா மதியும் தழலை
வீசுதென்ன செய்வேன் - மின்னே ! (தூது)

3) வஞ்சியே! சாகேந்திரன், முன்பு
ரஞ்சிதமா யென்னைக கூடிச்
செஞ்சியி லுவந்த முன்னாள்
வஞ்சனைக் குள்ளாகி னேனோ? (தூது)

பதம் - 42

இராகம்: **கூருட்டி** தாளம்: *ஆதி*

பல்லவி

அடிக்கடி மோடி யீதேனோ ஆசையான - என்தன்
யோகமோ மின்னாள் செய்கை தானோ (அடிக்)

அனுபல்லவி

கொடைக்குக் கர்ணன் சகசேந்திரன்
வாரானோ மால் தீரானோ! (அடிக்)

சரணங்கள்

1) மருவி மறக்கப் போமோ மானே நீ
அழைத்து வராமலே தாமதஞ் செய்யலாமோ?
பருவ வயதென்ன ஆர்க்குத் திறமோ
போனால் வருமோ. (அடிக்)

2) பாங்கி மதிதழல் பெய்ய பிராணநாதன்
இணைபிரியா மடவார் பரிகாசம் செய்ய
வாங்கி மதனன் வில்லை வளைத்தானெய்ய
யானென்ன செய்ய (அடிக்)

3) வர சாகேந்திரன் என்மேலே
வாசுதேவகவி மீதினில் பக்ஷம்
வைத்ததுபோலே
கருணை செய்து மருவானோ முன்போலே
என் மீதிலே (அடிக்)

பதம் - 43

இராகம்: **காபி** தாளம்: ஆதி

பல்லவி

தூதாய் யான் அனுப்பின மாது தானே - அவன்
மீதில் மோகமாய் மேவினாள் (தூதாய்)

அனுபல்லவி

சீதமதி வேணியர் பாதம் பணி சகஜி
நாதன்முன்னே என்னுட காதல் சொல்லிவாவென்று
(தூதாய்)

சரணங்கள்

1) உள்ளத்தினில் இவள்தானே ப்ராணசகி என்று நான்
உண்மையாகவே நம்பினேன்
வளர்த்தகடா மார்பில் பாய்ந்தது போலவே
வஞ்சனை செய்யுமவள் நெஞ்சம் நான் அறியேன்
(தூதாய்)

2) வேளையிது வென்றவன் நாளில், பணிந்து மெத்த
வேண்டியே அனுசரித்தேன்
தோளிலிருந்து மெள்ளச் செவியைக் கடித்ததுபோல்
தோகையவளிப்படித் துரோகஞ் செய்தவள் மானே!
(தூதாய்)

பதம் - 44

இராகம்: **கமாசு** — தாளம்: **ஆதி**

பல்லவி

இல்லை இல்லை என்று இன்னம்
ஏன் மறைக்கிறாய் ? (இல்லை)

அனுபல்லவி

எல்லாம் எனக்கு வெளியாச்சுதுபோடி
கலைவல்லவன் சகஜி மகிபன் உன்னைச் சேர்ந்தால்
(இல்லை)

சரணங்கள்

1) தனத்தில் நகரேகை ஏது ? - இதழ்
தனிற் பல் குறிவந்த தேது ?
மனத்தினில் படபடப்பேது? - இந்த
வஞ்சகமும் உனக்காகாது. (இல்லை)

2) தேனே உன் வதனத்தில் வேர்வை - ஆடு
திருடின கள்ளன் போல் பார்வை
ஆனால் அவனுக்கு நீ ஏர்வை - அவனருகில்
தூதாய் உன்னை அனுப்பியதே தோர்வை. (இல்லை)

3) அதிவிநயம் உனக்குச் சொந்தம் - மெத்த
அதிரக்தம் நயனாரவிந்தம்
சிதறாது ஏதடி கந்தம் ? - வாசு
தேவன் புகழ் சாகேந்த்ரன் சேர்ந்ததே மிக அந்தம்.
(இல்லை)

பதம் - 45

இராகம்: **யமுனா கல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

மெத்த நாகரிகக் காரிகாண்
சத்திய பாஷா! அரிச்சந்திரனே !
சகஜிமஹா ராஜேந்த்ரனே ! (மெத்த)

அனுபல்லவி

தேகம் பத்தரைமாத்துத் தங்கமாம்
சன்மபூமி ஸ்ரீரங்கமாம்
தோகைமுலை நாக ரங்கமாம்
சொன்னேன் உமக்கவள் பொங்கமாம்[1]
(மெத்த)

சரணங்கள்

1) பங்கயம் போலிரு நேத்திரமாம் - அந்தப்
பாவையிடை நூல் மாத்திரமாம்
சங்கீதத்தில் விருது பாத்திரமாம் - அந்தத்
தருணி மேனகை கோத்திரமாம் (மெத்த)

1. பொங்கம் - உகத்தல்.

2) முத்து நகையில் சிங்காரியாம் - அவள்
முன்னும் உமக்கனு சாரியாம்
கத்தூரி குங்கும தாரியாம் - அவள்
கர்நாடக தேச சஞ்சாரியாம் (மெத்த)

3) மங்கையர் மன்மத லீலனே! - சுவாமி
வாசுதேவ கவி லோலனே!
துங்க ஜனர்க்கனுகூலனே! -சுவாமி
சோளேந்திர! சாக பூபனே! (மெத்த)

பதம் - 46

இராகம்: ஸ்ரீகாந்திமதி தாளம்: கண்டசாபு

பல்லவி

பேராசை ஒருமின்னாள்
பேசி வரச்சொன்னாள் (பேராசை)

அனுபல்லவி

தாராளும் சாகேந்திர
சாமி உன்னுடனே (பேராசை)

சரணங்கள்

1) உன்தன் அருகினில் காத்து
உபசாரம் மிகவுரைத்து
சந்தோஷ வேளை பார்த்து
தனித் தேறலைக் கொடுத்து (போராசை)

2) தயவுள்ளவன் நீ என்று
சாரிவர்[1] வெதிர்நின்று
மயல்மிக மிஞ்சு தென்று
மயங்குராளென்று (பேராசை)

1. சாரி (தெலுங்கு மொழிச்சொல்) இதன் பொருள்-ஒருமுறை, படை வரிசை.

3) காமினி ஜன மன்மத
கவிவாசுதேவ நுத
சாமி நிகர் நீத
சகஜி பூ நாத (பேராசை)

பதம் - 47

இராகம்: **கல்யாணி** தாளம்: *கண்டசாபு*

பல்லவி

காதல் மிகவானாள் இந்தக் காரிகை - சாமி (காதல்)

அனுபல்லவி

வேதியர் பரவும் சோழ நாத
சாகேந்திரா! உன் மீதில் (காதல்)

சரணங்கள்

1) முன்னொரு நாள் நின் பவனம்
மன்னார் கோவிலில் கண்டு
சன்னத்தம் கொண்டவள் போலே
தன்னையுந்தான் அறியாமல் (காதல்)

2) பாரமுலை மேல் சுகந்தம்
ஆரமுந்தான் அணியாமல்
மார வெறி கொணடெந் நேரமும்
ஆவாரையுங் கண்ணால் பாராமல் (காதல்)

3) கொஞ்சி ஒருவர்க் கொருவர்
மிஞ்சியே லீலை தொடுத்து
பஞ்சபாணன் ரதிபோலே
பஞ்சணைமேல் உன்னைக்கூட (காதல்)

4) ஆசை கொண்டேன் என்தன் மின்னை
நேசமாய் மருவவேணும்
வாசுதேவன் புகழும் ராச
ராச வைபவ சாகேந்திரா! (காதல்)

பதம் 48

இராகம்: **ஹம்ஸானந்தி** தாளம்: **ஆதி**

பல்லவி

மருவா திருக்கக்கூடாது
இன்னுமவனை (மருவா)

அனுபல்லவி

தரணி வம்ச தீபன் சகஜி
ராசேந்திரன் தன்னை (மருவா)

சரணங்கள்

1) வாது கூறும் குலமாதர்
வாசிலும் சம்மதம்
சாதியார் என்தனை வேறாய்த்
தள்ளிவிட்டாலும் சந்தோஷம் (மருவா)

2) துடிக்கும் சேல்விழி மானே
தூறு சொல்வார் சொல்லட்டும்
அடிக்கும் காத்துக் கெல்லாம்
படல்கட்டக் கூடுமோ சொல் (மருவா)

3) சொரிதமிழ் வாசுதேவன்
துதிக்கும் கம்பீர!
நாரியார் மோகன மார!
ஏக நரபதி உதவுகுமார! (மருவா)

4) சேரர் வணங்கும் கம்பீர !
வாசுதேவன் துதிக்கு மொய்யார !
மேருதீர ! ஹம்வீர !
சிருங்கார விகார (மருவா)

5) வாராய் முலையில் முன்போல்
சேராய் சகஜி ராஜேந்த்ரா
பரிவாய் என்மீதில் வைத்த
பக்ஷமே லக்ஷம் காண்போடி. (மருவா)

பதம் - 49

இராகம்: **பைரவி** தாளம்: ***சாபு***

பல்லவி

என் செய்வேன் ? சாகேந்த்ரன்
இன்னும் வரக்காணேன் யான் (என்ன)

அனுபல்லவி

1) ஏராள மான மின்னார்
எனக்காகத் தூதுபோனபேர்
யாரானாலும் அவர்க்கென்
ஆசை தெரியச் சொன்னால்

வாராரோ வந்தென் மோகம்
தீராரோ என்மேல் தயவு
பாராரோ கேளடி மானே ! (என்ன)

2) வாசமுலாவும் புஷ்ப
வகை பொருந்தாது
வாடை பூசினாலும்
வடவை போலெண்ணி

கூசுதே எந்தன் மேனி
கூசுதே எந்தன் மனம்
பேசுதே நா வெளிமை கேளடி மானே! (என்ன)

3) வாடா மதி வதன
வாசுதேவன் துதிக்கும்
சோடாக சாகேந்திரன்
சோராதே என் மனது

வாடுமோ அவன் லீலையைத்
தேடுமோ தழுவிப் பிரியக்
கூடுமோ கேளடி மானே. (என்ன)

பதம் - 50

இராகம்: **கல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

சும்மா என்மேலென்ன வன்மமோ ?
இல்லாத்தூறு சொல்வதுனக்கு தன்மமோ ? (சும்மா)

அனுபல்லவி

சம்மதன் சாகேந்திரன் என்னைச் சேரச் சொல்ல
தையலே உனக்கு ஏன் பயந்தானோ ? (சும்மா)

சரணங்கள்

1) குறியேது இதழிலென்று
குறியாதடி - மானே
கொவ்வை யென்று
கைக்கிளி கொத்துதடி (சும்மா)

2) இருகண் சிவந்ததேதென்று
எண்ணாதே மானே!
இந்நேரம் சுனையில்
யான் விளையாடினேன். (சும்மா)

3) சரிவானேன் குழலென்று
சங்கியாதடி மானே!
தண்மலர்காய்வண்டு
கலைத்ததடி (சும்மா)

4) அழிவானேன் நுதல் பொட்
டென்னாதே மானே
அதிவேக நடையில்
வேர்த் தழிந்ததடி (சும்மா)

5) குரல் நெரிந்தது கண்டு
கூறாதே - மானே
குளிர்தமிழ் வாசுதேவன்
பதம்படித்தேனடி. (சும்மா)

பதம் - 51

இராகம்: **அடாணா** தாளம்: **ஆதி**

பல்லவி

நில்லடி சொல்லடி வல்லடிக்காரி (நில்லடி)

அனுபல்லவி

மெல்லடி பூவடி முலை
வல்லடி என்னாசை வச
மல்லடி இறுகவணைத்துப்
புல்லடி நீ - பெண்ணரசே! (நில்லடி)

சரணங்கள்

1) ஆரடி உனக்கு நிகர்
பாரடி என்மேல் கருணை
தீரடி மதன வாதை
சேரடி மனங் களிக்க (நில்லடி)

2) தேனடி உன்மொழி கண்கள்
மானடி சித்தமிரங்காதது
ஏனடி உன்னை நம்பினேன்
நானடி தயை நினைந்து. (நில்லடி)

3) பூசவோ கொங்கை மேல் கந்தம்
வீசவோ கவரி சற்றும்
பேசநினை யாமலென்முன்
மோசமே செய்தால் என் செய்வேன் ? (நில்லடி)

4) வாசுதேவ கவி மீதில்
நேசமே புரக்கும் சோழ
தேச மகா ராஜ
சாக ராஜன் நானடி (நில்லடி)

பதம் - 52

இராகம்: **தேஷ்** தாளம்: **ஆதி**

பல்லவி

கண்டு மையல் கொண்டவன் நானடி - உன்னைக்
(கண்டு)

அனுபல்லவி

உண்டில்லை யென்னு மிடையும்
அண்டரமுத விதமும்
வண்டு நேர் விழியும் - மலர்ச்
செண்டு நேரிரு தனமும் (கண்டு)

சரணங்கள்

1) சித்தஜன் மலர்க் கணைகள்
மெத்தவும் வருத்துதின்னும்
சித்தம் இரங்காமல் - என்மேல்
எத்தனை ராஜஸம் ? உன்னைக் (கண்டு)

2) பஞ்சபாணனுடன் பல
வஞ்சியர் மகிழ என்னிடம்
வஞ்சம் செய்யும் வகையும் - உந்தன்
கொஞ்சுங்கிளி வசனமும் (கண்டு)

3) ஓதிம நடையுடனே[1]
ஆதரவாகிய சகி
மாதருடன் அன்று - தெரு
வீதியில் வரும்போதுன்னை (கண்டு)

4) வாசுதேவன் புகழ் சகஜி
ராசன் பணி குடந்தை
வாசன் ஆதியான - கும்
பேசன் தானடி யுன்னை (கண்டு)

பதம் - 53

இராகம்: **வசந்தா** தாளம்: **ஆதி**

பல்லவி

அதட்டிப் பார்க்கிறீர் ஏது
அந்தவகை இங்கு செல்லாது. (அதட்டி)

அனுபல்லவி

மதன ரூப! தஞ்சை வாழும்
சாக பூப ! என்னை (அதட்டி)

சரணங்கள்

1) ஒருக்காலே தானே மிண்டோ ?
உழக்கில் கிழக்கு மேற்குண்டோ ?
சேர்கிறீர் எனது ஏழ்மையைக் கண்டோ ?
தேவரீர்க் கென்ன நான் பெண்டோ ? (அதட்டி)

1. ஓதிமம் - அன்னம்.

2) ஆசையானால் நாளைவந்து புல்லும்
அய்யா இன்றைக்குக் கூடாது செல்லும்
ராசா நீரானால் மட்டிலே நில்லும்
நான் பயப்படுவேனோ சொல்லும் (அதட்டி)

3) கற்ற பேருக் கெல்லாம் சகாயா
கவி வாசுதேவன் மீது நேயா
சித்தஜன் ஏகராஜன் சேயா
சாக ராசேந்திரனே! துரைராயா! (அதட்டி)

பதம் - 54

இராகம்: **ஷண்முகப்ரியா** தாளம்: **ஆதி**

பல்லவி

தொடவேண்டாம் ஐயா - குடிவழிக்
கடவல்ல மெய்யா (தொடவேண்டாம்)

அனுபல்லவி

தொடவேண்டாம் இதுவெல்லாம்
குடிவழிக் கடவல்ல
துரையாஞ் சகசி ராசா
சொன்னேன் சொன்னேன் - என்னை
(தொடவேண்டாம்)

சரணங்கள்

1) கொண்ட புருஷனிது
கண்டா லெனை வெறுப்பன்
மண்டலேந்திர! உன்னைத்
தண்டனிடுறே னென்னைத் (தொட)

2) காலில் வந்தழியாமல்
கோலின அபிமானம்
வேலிப் பயிரழிந்தால்
விளையுமா றெப்படி ? (தொட)

3) ஆரூரா ரருளாலே
சீரூர் சகசி ராசா!
மேருமுலை மேலிப்போ
சேருமினிமேலென்னைத் (தொட)

பதம் - 55

இராகம்: ரீதிகௌளை தாளம்: ஆதி

பல்லவி

சுருவம் கண்டே உளவு தெரியாமல்
மயங்குறீர் மருவிப் பாரும் நீர்-போமையா (சுருவம்)

அனுபல்லவி

பருவம் வந்தாலுமென்ன ?
புருஷன் மனமறிந்து
சருவி மேவவே அறியாள் (சுருவம்)

சரணங்கள்

1) கொங்கை எழுந்தா லென்ன ? சாமி
இங்கிதம் தெரியாது
எங்கே போறாள் சொல்லையா ? (சுருவம்)

2) என்னைச் சேர்ந்த நீரந்த
மின்னை ஒருநாள் சேர்ந்தால்
பின்னை என் வல்லமை தோணும் (சுருவம்)

3) வாசுதேவன் மேல் விசு
வாசம் வைத்து ரக்ஷிக்கும்
போச! சகஜி ராஜேந்திர!
போக தேவேந்திர! (சுருவம்)

பதம் 56

இராகம்: **ஸாவேரி** தாளம்: **ஆதி**

பல்லவி

சமுகம் கண்டேனே - சுவாமி
பாக்யசாலி நான்தானே. (சமுகம்)

அனுபல்லவி

சமுகம் காணவந்து சகல பூபாலரும்
அமரேந்திரரென்று போற்றும் ஐயா!
சகஜேந்திரா உன் (சமுகம்)

சரணங்கள்

1) பூமி கற்பக! புண்ய புருஷ சேகர
உந்தன் சமுகம் சாமான்யமன்றே!
மாமதி நிகராமென் வதனம் கண்டபோதே
நானாம் பூர்வ ஜன்மத்தில் அதிக சுகிருதஞ்
செய்தேனே. (சமுகம்)

2) சந்ததம் உன்னுடைய சபையில் அதிசயமும்
இந்த வைபவமும் எவர்க்கும் எளிதோ!
சிந்தை மகிழ்ந்தேன் என் சென்மம் சபலமாச்சு
எந்தன் பங்குக்கொரு இஷ்ட தேவதையாமோ!
(சமுகம்)

3) தஞ்சாபுராதிப சகல குணோந்நத
விஞ்சு சோளேச விதரண சூர
வஞ்சியர் மன்மத வாசுதேவ கவி
செஞ்சொல்லால் மகிழும் ஸ்ரீ சாகபூப-உன் (சமுகம்)

பதம் 57

இராகம்: **காபி** தாளம்: **ஆதி**

பல்லவி

நயமாகப் பேசுறீர்! அநுகூல மிங்கே
நடவாது போம் போம் - இந்த ஜாலம். (நயமாய்)

அனுபல்லவி

ஜயவிக்ரமார்க்க ரணசூர ராஜ
சேகர சகஜி ராஜ கெம்பீர ! (நயமாய்)

சரணங்கள்

1) வீணே சம்மதிப்பாரோ யாரும் - இங்கே
வேறே பெண்களுண்டானால் பாரும்
மாணிக்க மோதிரத்தைத் தாரும் -வளவில்
மனது சம்மதமானால் வாரும். (நயமாய்)

2) வங்கணமெல்லாம் அங்கேயாச்சு - சுவாமி
இங்கே வந்து பேசுவது மேல்பூச்சு
எங்கே படித்தீரிந்தப் பேச்சு - போதும்
ரங்கினது வரையி லேச்சு. (நயமாய்)

3) செந்தமிழ் வாணர்க்கு உபகார ! - வாசு
தேவன் மேலன்பு வைத்த தீர !
அந்தமாய் என்னை முன்போல் சேர
வாருமையா சாகராஜ! ஒய்யார ! (நயமாய்)

பதம் - 58

இராகம்: **காபி** தாளம்: **ஆதி**

பல்லவி

ஐயா ! சாமி ! நீ வாடா - என்னை
அணைத்து முத்து முத்தாட (ஐயா)

அனுபல்லவி

வையம் புகழும் சாகேந்திர !
போக தேவேந்திர !! (ஐயா)

சரணங்கள்

1) கன்னல் வேல்சேனை வெல்லுதே
கனகமுலை மெத்த விம்முதே
பன்னீரும் வெந்நீர் ஆகுதே
பாவையென் அகம் நோகுதே. (ஐயா)

2) சித்தம் உன்னை நாடுது
தேகம் உருகி வாடுது
நித்திரை ஆகாரம் தேடாது
ஆசை பொல்லாது (ஐயா)

3) வன்மம் என்மீதி லாமோ?
மருவி மறக்கப் போமோ?
முன்போலே என்னைநீர் சேரும்
இதழ் இப்போது தாரும். (ஐயா)

4) தோகையை ராசை மன்மத!
துய்ய வாசுதேவ நுத!
ஏக ராஜேந்திரனின் பால!
சகஜி பூபரிபால!! (ஐயா)

பதம் 59

இராகம்: **கமாசு** தாளம்: **ஆதி**

பல்லவி

ஒருநாழி யிங்கே நில்லடா - எனக்கு
உன்மேல் ஆசை வசமல்லடா. (ஒருநாழிகை)

அனுபல்லவி

திருமாது வளர் தஞ்சை
அரசாளும் சாகேந்திர! (ஒரு நாழிகை)

சரணங்கள்

1) ஒருநாழி மகிழ்ந்து விளையாடவே-என்
வாஞ்சை பதறாது உன்னைக் கூடவே
விருது பேசியே காமவேளெனைக் கண்டு-பூ
வாளி சொரிகிறான் மலர்மேனி வாடவே.
(ஒரு நாழிகை)

2) தனமுன் கைகண்டு மெத்த வீருதே - உன்னைத்
தழுவியணைக்க என்கை தேருதே
அனகன் ரதிபோல் கூடி ஆசை தணியவே - என்
மனதுமிகத் தீவிரம் கூறுதே (ஒருநாழிகை)

3) ராஜாதிராஜா பணி பாதனே! - சோழ
ராச்சியம் செங்கோல் நடத்தும் நீதானே!
நேசம் மிகுந்த கவிவாசு தேவனே - புகழும்
ஸ்ரீசாக ராஜ மகாராஜனே! (ஒருநாழிகை)

பதம் - 60

இராகம்: **கானடா** தாளம்: **ஆதி**

பல்லவி

எந்தன் பூஜாபலமும் என்வித்யா ப்ராபல்யமும்
இப்போசபல மாச்சையா (எந்தன்)

அனுபல்லவி

சந்திரவதன! சூர்யவம்ச தீபகனான
சகஜி மகிபால; ஸங்கீத லோல! (எந்தன்)

சரணங்கள்

1) மதிகண்ட குமுதம்போல் ரவிகண்ட வாரிஜம்போல்
வாரிஜம்கண்ட மயில்போல் நிதிகண்ட
யாசகர்போல்
இதயமும் சந்தோஷிக்க நேத்ரோத்ஸவமாய்
உன்னைப்
பார்த்தேன் இப்போ சுதினம் சு தினம் (எந்தன்)

2) மின்னைக்கண்ட கேதகிபோல் பொன்னில்கண்ட
ரத்தினம்போல்
வெண்மழைகண்ட பயிர்போல்உன்னைக்
கண்ணாரக் கண்டேன்
முன்னாள் நான்செய்த உபயர்க்குமிதே ஸ்தோத்ரம்
உன்கிருபைக்கு நான்பாத்ரம்-ஸ்வாமி. (எந்தன்)

3) பத்திலே பதினொன்றாய்ப் பாராமல் என்மீதில்நீ
பட்சம் வைத்து ரக்ஷிஜயா!
ஸத்ய வாசக! வாசுதேவகவி விநுத
ஸஹஜி மகாராஜ! ஸாகித்ய போஜ! (எந்தன்)

பதம் - 61

இராகம்: **சக்ரவாகம்** தாளம்: **ஆதி**

பல்லவி

சந்திரமுகி ! உந்தன் மனதிப்போ
சந்தோஷமானதே போதும். (சந்திர)

அனுபல்லவி

செந்தமிழ்க் கருள்மணி சாகேந்திரன் உன்மேல்
வைத்த சினேகம் மறவான் காண் எப்போதும். (சந்திர)

சரணங்கள்

1) குங்குமமும் திவ்ய சந்தனமும் தரித்தால்
கொங்கை இனி கொப்பளியாதே
திங்களுடன் வீசு தென்றல் வாடையுமினி
செத்தழலை மொண்டு இறையாதே (சந்திர)

2) அந்தரத்தில் பெண்கள் ஏசும் வார்த்தைகட்கெல்லாம்
உத்தரமினி சொல்ல லாச்சே
அந்தமாம் உன்கைக்கு வளையாகிய மோதிரம்
அங்குயில் தரிக்கலாச்சே. (சந்திர)

3) என்தன்முன் அனுதினம் நீசொன்ன ப்ரியவாக்யம்
இப்போ சபலமாய்க் கண்டாயே !
இத்துரவிகள் பேதம் தோன்று தாகையால்
பகலிது இரவென்று நீயறிவாயே (சந்திர)

4) நந்தமிழ் வாசுதேவன்புகழ் சாகேந்திரன்
நாடிவந்துனை யணைந்தானே !
தத்தைகேள் அவனைச் சேர்வது முன்னாள்
தவப்பயன் காணடி மானே ! (சந்திர)

பதம் - 62

இராகம்: **இந்தோளம்** தாளம்: **ஆதி**

பல்லவி

கிள்ளை செகித்தது மின்னே !
அன்பாய் வளர்ந்த (கிள்ளை)

அனுபல்லவி

வள்ளலெனுஞ் சாகேந்திரன்
மன்னன் செய்த குறியல்ல. (கிள்ளை)

சரணங்கள்

1) ஆன பஞ்சணைமேல் படுத்தேன் மிகவும்நான்
ஆதரவாக எடுத்தேன்
கும்ப முலைமேல் மிடுத்தேன் - கொஞ்சினேன்
மார்பில் கிடந்தேன். (கிள்ளை)

2) காவலரை அரைக்கண்ணாற் காணும் ஆசையினாலே
கலங்கி என்மனது நாண
கோவை இதழில் குறிதோண - மனம்
கொதித்து வசையும் பூண. (கிள்ளை)

3) சந்ததமும் உயர்கரமீதில் அன்பாய் வணங்கும்
சாகேந்திர ஸ்வாமிக்கு இப்போது
எந்தனைச் சேர்ந்தாப்போற் - சூது
நல்லாருஞ் சொல்லுறீரேது. (கிள்ளை)

பதம் 63

இராகம்: **சகானா** தாளம்: **ஆதி**

பல்லவி

மின்னார்கள் மதனன் அளகை மேவும்
சாகேந்திரன் முன்னுன்னாசை சொல்லிவர (மின்)

அனுபல்லவி

கன்னியா ரத்தினம் தன்னைக்
காணிக்கையாய்க் கொண்டு (மின்னார்)

சரணங்கள்★

1) கட்டியத்தொனி முழங்கக் கவிவாணர் கொண்டாட
நட்டணையுடன் மடந்தையர் நடனம்புரிய
மட்டுலாவும் ஸங்கீத வாத்தியம் முழங்கும்
சபையில்
கிட்டி யானுரைத்துமவன் கேட்பதெப்படியோ?
(மின்னார்)

2) வாகன் அளகை வேந்தன் வாசுதேவன் துதிக்கும்
நாகரிகராம் சகஜீ நரபதீந்திரன்
போகமாய் முயன்றுன்னை யிணங்கி அனுபவித்துன்
காசுதாளிய நியாயம் காணடி மானே! (மின்னார்)

★ முதலாம் சரணம் முழுமையாக இல்லை.

பதம் - 64

இராகம்: **பிலஹரி** தாளம்: **ஆதி**

பல்லவி

அளகங்கோதிமுடியுமென் அணங்கே
சொல்வ தென்னடி. (அளகங்)

அனுபல்லவி

நளின மாதுவளர் அளகை
நாதன் சகஜி ராசனை (அளகங்)

சரணங்கள்

1) துரை என்று அறியாயோடி
துணிந்து சொன்ன தெப்படி ?
முறைசெய்த பணிவிடை புரிந்திட
ஊழியப் பெண்கள் இல்லையோடி ? (அளகங்)

2) போசல வம்ச தீபனை
பூலோக தேவேந்திரனை
வாசுதேவன் கவிதையில்
கிருபை வைத்த சகஜிமன்னனை-நீ (அளகங்)

பதம் - 65

இராகம்: **ஆகிர்பைரன்** தாளம்: **ஆதி**

பல்லவி

மங்கைப் பருவ வஞ்சிகாண் - சாமி இவள் (மங்கை)

அனுபல்லவி

இங்கித குணசீல ! ஏகராஜேந்திரன் பால !
சங்கீத ரஸலோல ! சகஜி ராஜ பூபால !! (மங்கை)

சரணங்கள்

1) கார்நேரழக! நீ கண்டு - இவள்
கனிவாயதரம் கல்கண்டு
மார்முலை பூச் செண்டு
வயது பன்னிரண்டு
அரிவையாள் திரண்டு
அஞ்சாறு மாதமுண்டு (மங்கை)

2) தண்மலர் போல் சரீரம் - நல்ல
சங்கீத சாத்திர வியாபாரம்
வண்மை ஆலிலைபோ லுதரம்
வசிப்பு விசயா புரம்
புனைச்சொல்லேன் எந்நேரம் -
உன் மீதிலாசை யபாரம். (மங்கை)

3) செஞ்சொல் வாணர்க்காதார! - எந்நாளும்
சோழதேச பாலனசதுர!
வஞ்சியர் மதனாகார!
வாசுதேவ வுபகார!
தஞ்சாபுரீஸ் வர!
சகஜி ராஜ சேகர! (மங்கை)

பதம் - 66

இராகம்: **ஆபோகி** தாளம்: **ஆதி**

பல்லவி

இந்த வேளைக்குப் போமையா - சாமி (இந்த)

அனுபல்லவி

அந்தி நேரம் வந்தென்னை
அணையுமையா - சாமி (இந்த)

சரணங்கள்

1) ஆடல் பாடலில் மிக்க அந்தக்காரிகை
யென்றுன்னை
நாடிவந்தனன் என்று நடுப்பகலில்
ஆடைநெகிழ்க்க வேண்டாம் அபிமானங் காத்திடில்
கோடி புண்ணியம் உம்மைக் கும்பிடுகிறேன் - சாமி
(இந்த)

2) விந்தையா இக்கணத்தில் வெள்ளங்கொண்டு
போறாப் போலே
இந்தத் தீவிரம் உமக்கு ஏதுக்குத்தான் ? - சாமி
பந்தமோ என்னுடன் பரத்தையாகிலும் மத்த
பைந்தொடி போலல்ல பயப்படுவேன் நான். (இந்த)

3) கடினம் செய்வதேது கன்னியோ இரவில்வந்து
அடியேன் பிரமானிக்கம் அறியுமையா
வடிதமிழாகரன் வாசுதேவன் புகழ்
மடவார் மோகன சாஹ மகாராசனே. (இந்த)

பதம் - 67

இராகம்: **மோகனம்** தாளம்: **ஆதி**

பல்லவி

பதறவேண்டாம் சொன்னேன்
பாங்கி நீ கேளாய் (பதற)

அனுபல்லவி

விதுமுகன் சாகேந்திரன்
வேண்டித்தானே வருவான். (பதற)

சரணங்கள்

1) வாசமலரை நாடி
வரும் 'அளி' போலே
வலிய உந்தனைத் தேடி
வரத்து முன்னாலே. (பதற)

2) தரியா மோகமானாலும்
தன்னை மிஞ்சாதே
தெரிய வேணும் பாங்கி - பூ
தரத்துக் கஞ்சாதே. (பதற)

3) தமிழ் வாசுதேவன் புகழ்
சாகேந்திரன் தானே!
தழுவிமுன்போல் முத்தாட
வருவான்காண் தேனே! (பதற)

பதம் - 68

இராகம்: **யமுனா கல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

மாட்டோமென்னாதேயடி - மின்னே (மாட்டோ)

அனுபல்லவி

தாட்டிகள் தஞ்சை வாழும்
சகஜிராஜன் அழைத்தால். (மாட்டோ)

சரணங்கள்

1) அருமை அவன் சமட்சம்
அடைவதேகோடி லட்சம்
தருணியை அவன் பட்சம்
தானே! கற்பக விருட்சம், (மாட்டோ)

2) அண்டையில் வந்தபோதே
அசட்டையாக வெண்ணாதே
மண்டலேசுவரன் மீதே
வலிமை செல்லுமோ மாதே. (மாட்டோ)

3) வாசுதேவ னென்றும் மகிழும்
சாகேந்திர னென்று
ஆசையுடன் வாவென்று
அணைந்ததே மிகநன்று (மாட்டோ)

பதம் - 69

இராகம்: **ஆரபி** தாளம்: **ஆதி**

பல்லவி

பொதுமாத ராசை நிசமென்று நம்பப்
போகாது போகாது காண். (பொது)

அனுபல்லவி

ததி அளந்துண்ட கண்ணன் நிகர்
தஞ்சையில் சகஜி மகா ராஜேந்த்ரா (பொது)

சரணங்கள்

1) மஞ்சள் வாடையினால் அங்கம்
மினுக்குவள்-மார்பில்
தனம் காண்பித்து உடனே மறைப்பள்
தஞ்சம் நீர், என்மீதில் தயவு பாரென்பள்
சாமி நான் மிகவும் ஏழைஎன்பள்.

2) ராகம் படிப்பள் மயங்கிமேல் விழுவள்
"ராம ராமா யினி யார் பிரிவா" ளென்பள்
யோகசாலி நானே என்னிளமையை
ஒப்புவித்தேன் என்பள்.

3) போக மாயை செய்வள்-கையில் கோபால
சக்கரப்போன் காணாவிட்டால்
வஞ்சித்தேனென்று போய் வாருமென்று
வழிவிட்டு அகத்திருப்பள்.

பதம் 70

இராகம்: **பைரவி** தாளம்: **ஆதி**

பல்லவி

நேசமில்லாத பெண்மேல்
ஆசை கொள்வதே மோசம் (நேசமில்)

அனுபல்லவி

வீசுபுகழ் சகஜிராஜ!
போசல சந்திர! (நேசமில்)

சரணங்கள்

1) சித்தமிரண்டும் ஒரு
மித்தால் அல்லாமல் - வகை
மெத்த செய்தாலும் அங்கே
விரசம்தானே விளையும்?
சித்திர பொம்மையுடன்
சிருங்காரலீலை விதம்
எந்தனை செய்தாலும்- தான்
ரக்தி காணுமோ சாமி (நேசமில்)

2) மையாரும் விழியார்தன்
மனதறியாத யோகம்
சையோக மல்லவென்று
தமிழ்வள்ளுவர் சொல்லினர்
ஒய்யாரமாகிய நல்
லுருவமிருந்தா லென்ன
அய்யா! பொன்னின் மலர்
அணிந்தது நியாயமாகும். (நேசமில்)

3) தேனும்வேம்பும் கலந்தால்
தித்திப்பாகுமோ - முன்னாள்
ஆனைகண்ட கதைபோல்
ஆனாலன்றோ புணர்ச்சி
மாநில மெல்லாம் புகழ்
வாசுதேவன் துதிக்கும்
நானாகலா ப்ரவீண!
நாத! சாகரபூபால!! (நேசமில்)

பதம் - 71

இராகம்: **பூபாளம்** தாளம்: **ஜம்பை**

பல்லவி

சுப்ரபாதம்! சுப்ரபாதம்! சகஜிராஜனே! (சுப்ர)

அனுபல்லவி

சுப்ரபாதம் சுப்ரபாதம்
சுகவிபோஜனே!
சுப்ரபாதம் சுப்ரபாதம்
போசலேசனே! (சுப்ர)

சரணங்கள்

1) இந்திர திக்கில் அருண காந்திகள்
இயலுடன் விஸ்தாரமாச்சு
விந்தைசேர் அரவிந்த வாசனை
வீசுது இப்போது
அந்தமாய் உபவனங்கள் தோறும்
சகுந்தசாதிகள்★ ஒலிமுழக்குது
சுந்தரானனே திருவனந்தலோ!
சுவாமி போசலேசனே! (சுப்ரபாதம்)

★ சகுந்தலம் - பறவை

2) அல்லிருள் மெல்ல நீங்குது
அந்தணர்முறை மறையிலங்குது
துள்ளி வண்டுகள் குமுதமலர்ச்
சோலை மேவுது
தெள்ளுதமிழ்க் கவிவாணர்
வேதியர் ராசாக்கள் சேருறார்
என்னுவிழ இடமில்லை உன்நகர்
இவர்கட்கு அருள்செய்ய (சுப்ரபாதம்)

3) பாடகர் தேசாதியுடன் பூ-
பாள, தேவகாந்தாரி முழங்குறார்
கூடியே வாசுதேவ
கவிபதம் பாடுறார் மடவார்
நீடுபுகழ்சேர் சகஜி ராஜனே!
நித்யசோபனம் தேவர்க்கு
வேடிக்கை யதேச்சையா தானத்து
வேளையிது சுதினம்.

பதம் - 72

இராகம்: **கல்யாணி** தாளம்: **ஆதி**

பல்லவி

தப்பியோடிப் போங்கள் - முகலரே
தப்பியோடிப் போங்கள், (தப்பி)

தப்பியோடிப் போங்கள்தரியலர் பணிபாதன்
தப்புரை யுரையாத சகஜிராஜன் வாறான் (தப்பி)

சரணங்கள்

1) சுத்தி சுத்தி யிங்கே சுழலவேண்டாம் சொன்னேன்
புத்தியல்ல ஓடிப்போனால் உயிர்பிழைக்கும்
சுத்தன் ஏகராஜன் புத்திரன் சகஜி ராஜன்
கத்தி கொண்டால் கையில் சுத்திக் கிரையிடுவான். (தப்பி)

2) மட்டிப்புத்தியாலே மடியவேண்டாம் சொன்னேன்
பட்டநாமந்தாதப் பயலாய்ப் பிழைக்கலாகும்
துட்ட திக்ரசீலன் சிட்டன் சகஜி ராஜன்
கிட்ட வந்தால்தலை வெட்டிக் குவிக்கப் போறான்
(தப்பி)

3) ஒட்டுச் சலிகை★ சொல்லி உயிர் தோற்கவேண்டாம்
குட்டிச் சுவர்கள் தேடிக் குனித்து பதுங்கலாகும்
மட்டுலாவுஞ் சாக மகிபன் கண்டால் பின்னை
வெட்டிக் கழுகுக்கெல்லாம் விருந்து போடப்
போறான் (தப்பி)

4) கோலாகலங்கள் வேண்டாம் குதிரையேற வேண்டாம்
நாலுவழியும் ஓடி நரிபோல் பதுங்கலாகும்
மாலுக்கிணையாம் சாக மகிபன் கண்டால் பின்னைக்
காலில் பணிந்து புல்லைக் கவ்வ வேண்டும் சொன்னேன்.
(தப்பி)

5) வெள்ளை கட்ட வேண்டாம் மீசை முறுக்கவேண்டாம்
கள்ளத் தனங்கள் செய்து துள்ளித் திரியவேண்டாம்
வள்ளல் சகஜி ராஜன் வாகினி வருமுன்னே
மெள்ளத் தள்ளியொரு கள்ளிக்காடு தேடி. (தப்பி)

6) மல்லொத்த திண்புயன் வாசுதேவ கவி
சொல்லுக்குகந்தருள் சுகுணன் சாகேந்திரன் தன்
வில்லுக்கிலக்காகி வீணே மடிய வேண்டாம்
டில்லிக்கு வழிதேடித் திரும்பிப் பாராமலே. (தேடி)

பதம் - 73

இராகம்: **கேதாரகௌளை** தாளம்: **ஆதி**

பல்லவி

தயவாய் எந்தனைக் கையால்
தழுவியது அறிவேன். (தயவாய்)

★ சலிகை - அதிகாரம், செல்வாக்கு

அனுபல்லவி

செயசீலன் சாகேந்திரன் பின்
செய்ததேதோ அறியேன் (தயவாய்)

சரணங்கள்

1) குலவியே அவன் வந்தென்
கொங்கை தொட்டதறிவேன்
பலவித நகரேகை
பதித்த மார்க்க மறியேன். (தயவாய்)

2) அந்தமாம் இதழ் தாருமென்று
அனுசரித்தது அறிவேன்
தந்தரேகை வைத்து இதழ்
தந்த மார்க்க மறியேன் (தயவாய்)

3) தேடரிய தமிழ் வாசு
தேவன் போற்றும் சாகேந்திரன்
ஆடை நெகிழ்த்த தறிவேன்
அப்பால் என்னை யான் அறியேன்.
(தயவாய்)

பதம் - 74

இராகம்: **காபி** தாளம்: **ஆதி**

பல்லவி

மிஞ்சுதென் மோகம் உன்மேல் - ஸ்வாமி (மிஞ்)

அனுபல்லவி

தஞ்சைவாழ் சாக தீர! சரஸகுண கெம்பீர! (மிஞ்)

சரணங்கள்

1) எந்தன் மனது போலே உந்தன் மனதுமானால்
சிந்தை மனோரதங்கள் வந்துகைகூடும் ஸ்வாமி (மிஞ்)

2) சந்தோஷமாய் உன்னிதழ் தந்துமேவுமென்று நான்
எந்தவிதம் சொன்னாலும் இந்த தாமதமேது (மிஞ்)

3) காமன் கணைக்கும் இறை சோமன் தனக்கும் பகை
ராம! ராம! பெண் ஜென்மம் ஆமோ எவர்க்கானாலும்
ஸ்வாமி (மிஞ்)

4) உந்தன் மீதினிலே மோகமாகியே
உரோமலான என்னுடன் நீ மோடி செய்யலாமோ (மிஞ்)

5) அருமை அறிந்த நீ! ஒருமையுடனிளமைப்
பருவந் தனில் ஒருநாள் மருவிப் பிரியப் போமோ

6) அருள் வாசுதேவன் மீதில் கருணை புரக்கும் போச!
திருமேவும் அளகையில் வரு 'சாக' மகாராச ! (மிஞ்)

பதம் - 75

பல்லவி

என்னால் ஆகாதடி மானே - தூதுரைக்க (என்னால்)

அனுபல்லவி

மின்னார்கள் மதனன் அளகைமேவும் சாகேந்த்ரன்முன்
உன் ஆசை துள்ளிவரும் தூதுநாள் உரைக்க (என்னால்)

சரணங்கள்

கன்னியாரத்ன கனிகையைக் கண்டு
என்னேரம் என்னவேளை என்று காக்கும்
மன்னவர் கிடையாத மகாராஜன் சமூகத்தில்
... ... (என்னால்)

2) கட்டியத் தொனிமுழங்க கவிவாணர் கொண்டாட
நட்டணையுடன் மங்கை நடனம் புரிய
மட்டுலவும் ஸங்கீத வாத்யம் முழங்கும் ஸபையில்
கிட்டியா முரைத்துக் கேட்பதேதடி யோ. (என்னால்)

3) வாகன் அளகை வேந்தன் வாசுதேவன் துதிக்கும்
நாகரீகனாம் சகஜி நரபதீந்த்ரன்
போகமாய் முன்உன்னை இணக்கி
அனுபவித்ததுவும்
காகதாளீய ந்யாயம் காணடி அடியே! மின்னே!
(என்னால்)

பதம் 76

இராகம்: **நாட்டைக்குறிஞ்சி** தாளம்: **ஆதி**

பல்லவி

மெத்த நம்பினேன் நானடி - என்மேல்
இந்த பராமுகம் ஏனடி ? (மெத்த)

அனுபல்லவி

சித்தஞ்செய் மலரணை தனிலிருந்து உனது
கொவ்வை வாயிதழ் அமுதம்தந்து - கலவியில் (மெத்த)

சரணங்கள்

கன்னியுன் மொழிதானடி - வாசு
தேவன் கவிதைபோல் ருசிக்குதடி
முன்னணைந்தது என்னடி?
மோகம் வளருதடி
சன்னை சொன்னேனடி
சாகேந்த்ரன் நானடி. (மெத்த)

பதம் - 77

பல்லவி

ஆசை கொண்டாள் உன்மேலே - இவள் (ஆசை)

அனுபல்லவி

ஆசை கொள்ளவே வேணும் காசினி புகழும்
சகஜி ராஜனே! சோழேசனே! - இவள் (ஆசை)

சரணங்கள்

1) நேசமாய் உன் கேளீவிலாஸம் அறிந்தால்மக-
ராச உன்மீதில் ஆசைலேசம் வராதுகாண் (ஆசை)

2) மெத்தைமேல் எந்தனை அணைத்து முத்தாடியே-நீ
முத்தந்தந்த சுகம் நித்தம் தேடுது காண். (ஆசை)

3) ஸ்ரீவாஸுதேவன் மீதிலே வாஞ்சை செய்யும் போக!
தேவேந்த்ரா! சாக ராஜ! பாவாணர் தருவே! (ஆசை)

பதம் - 78

அறிவேன் அறிவேன் போமையா - உன்னை
(உன்னை)

அனுபல்லவி

ஒருநாளும் விட்டுப் பிரியாதவர்போல் வந்து
பேசுகிறீர் ஐயா! சாகேந்திரனே! (அறிவேன்)

சரணங்கள்

1) பட்டுரவிக்கைரெண்டு கட்டுவர்கச்சேலை ரெண்டு
எட்டு நாளையில் தாரோ மென்றீர்! உந்தன்
பொட்டுப் பேச்சிலே அந்தப் பெண்ணாய்
யிட்டுக்கட்டிச் சொன்னாளோ இங்கேவந்தீர்

மத்திம காலம்

கெட்டியாச்சு எனக்கென்ன தந்தீர் - கை
விட்டுக்கொடுக்க மனம் பொருந்தீர்
பட்டுக்கோட்டை வழிகேட்டால் - அதற்கு
கொட்டைப்பாக்கு விலைசொல்லி வந்ததை
(அறிவேன்)

2) மோடி வேண்டாமென்று நயமாய்க்
கூடினால் எனக்கென்ன உத்தாரமேது? - பழங்
காடிக்குபோய் தயிர் கொள்ளுங் காலமல்ல
(அறிவேன்)

3) தேசராஜா வானநீரெனக்கு இன்னும்
காசுதராமல் வேசி பிழைப்பதெப்படி-
தினந்தினம்
கூசாமல் வாரீக இந்தப்படிக்குக் கையில்
உண்டானால்
ராசியமாயொரு சாளிகைதாரும் - தந்தபேர்க்கு
நேசமாய் என்னை முன்போல் சேரும் - மதனனையும்
தாசனாகப் பண்ணிக்கொள்வேன் பாரும்
ஒருநாள் போல்
வாசுதேவன் மீதில் பக்ஷம் வைத்து ரக்ஷிக்கும்
போசனே1 தஞ்சைவாழ் சகஜிராசனே!
சோழேசனே.

78 அந்தாதிப் பாடலாக

தமிழ் மகள்

ஆதிநாள்முதல் என்னை
அணைந்த சாகேந்திரனைத்
தூதுவிட் டழைத்தது
துணிவோ வடுகச்சி ?

தெலுங்குமகள்

வடுகச்சியனி செப்ப
வச்சேவு அரவதாந
படுசுநிம்மனி நீதோ
பலுக வொச்சிதின

தமிழ் மகள்

வச்சிதினா வென்று
வழக்கும் கணக்கும் சொல்லி
மிச்சமாய்ப் பேசுற
விதமென்ன சொல்லடி

தெலுங்கு மகள்

அடியடியனி
ஆடேவேமே ஓ சிந்நதி
வீதிலோ இதி
நியாயமு காதே.

தமிழ் மகள்

நியாயமு இரு கொங்கை
நீ என் சாமிமுன்-உ
பாயமாய்க் காண்பித்தது
உதிதமல்ல வோ.

தெலுங்கு மகள்

உசிதமனி நாதோ
உதுடுகா எதிரிஞ்சி
வச்சி மாடலாட
வச்சுனா நீகு!

தமிழ் மகள்

நீகு நீகென்றிங்கே
நீலித்தனம் செலுத்தப்
போகாது உந்தனுக்கு இது
புத்தியல்ல வோடி.

தெலுங்கு மகள்

புத்திகானே மனமு
இத்ரமு ஏகமை
முத்துகானுந்தாமு
முதிதரோ ராவே.

தமிழ் மகள்

வாடி சத்யபாமை
உருக்குமணி போலே
கூடியாடி அனு
கூலமாய் மகிழ்வோம்.

தெலுங்கு மகள்

வாஹரே வந்திதுடௌ
வாசுதேவ நுத
சாஹராஜு நி சேரி
ஸததமு உந்தாமே.

எமது வெளியீடுகள்

ஜாதக அலங்காரம்	*125-00*
காலபிரகாசிகா	*100-00*
நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-I)	*200-00*
நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-II)	*100-00*
அமரகோசம் (பாகம்-I)	*65-00*
அமரகோசம் (பாகம்-II)	*60-00*
அமரகோசம் (பாகம்-III)	*60-00*
பிரகதீஸ்வர மாகாத்மியம்	*43-00*
ஜைனிஸம் கேட்லாக்	*10-00*
தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை	*35-00*
காயத்ரீ கோசம்	*30-00*
கீதகோவிந்தம்	*25-00*
கல்பலதா (ஸ்ரீருத்ரபாஷ்யம்)	*22-00*
பாணினீய தாதுபாடம்	*30-00*
விருத்தரத்னாவளி	*30-00*
பலவதி	*120-00*
நந்திநாகரி சுவடிகளின் அட்டவணை	*25-00*
பிரபஞ்சசாரசார ஸங்கிரஹம் (பாகம்-I)	*180-00*
பிரயோக ரத்னமாலா	*55-00*
ரத்ன பரீக்ஷை	*40-00*
சப்தம் தாளம் சொற்கட்டு	*40-00*
ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ தீபிகா	*100-00*
ஸ்தோத்ர ராமாயணம்	*25-00*
நாககுமார காவியம்	*55-00*
விமானார்ச்சன கல்பம் (பாகம்-II)	*75-00*
சூலினிகல்பம்	*50-00*
சூர்யசதகம்	*50-00*
தஞ்சை நாயக்கர் வரலாறு	*205-00*
யதிராஜவிஜயம்	*35-00*
பிரபோதசந்திரிகை	*70-00*

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்

மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.